விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 03 செவ்வாய்க்கிழமை (15.04.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 118




# இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுமாறு இந்தியா தெரிவிப்பது வெறும் சொற்கள்தான்

## ‘விடுதலைப்புலிகள் ஏடு’ சாடல்

(கிளிநொச்சி)

இலங்கைத் தமிழரின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று இந்திய அரசு கூறுவது வெறும் சொற்கள்தான் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடான விடுதலைப்புலிகள் ஏடு சாடியுள்ளது.

நேற்று வெளியான விடுதலைப்புலிகள் ஏட்டின் 140 -வது இதழின் ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் அரசியல் தீர்வு காண அரசு விரும்பவில்லை என்ற உண்மையையும் இராணுவத் தீர்வு மூலம் தமிழினத்தை அடிமைப்படுத்த அது முயல்கின்றது என்ற யதார்த்தத்தையும் இப்போது சர்வதேச நாடுகள் புரிந்து கொள்ளத் தொடங்கியுள்ளன.

போர் வெறிகொண்ட கடும் போக்காளர்கள், சமாதான வழியில் நாட்டம் இல்லாதவர்கள் என்றவாறாகப் புலிகள் மீது அரசு தொடுத்து வந்த அரசியல் குற்றச்சாட்டுகளுக்கு உண்மையில் உரித்துள்ளவர்கள் சிங்கள ஆட்சியாளர்கள்தான் என்ற உண்மையையும் உலகம் உணரத் தொடங்கியுள்ளது.

இவற்றின் விளைவாக அரசுடனான சர்வதேச உறவில் நெருக்கடிகள் ஏற்படத்தொடங்கியுள்ளன. அரசுக்கான போர் ஆயுதங்களையும் பொருண்மிய உதவிகளையும் போருக்கான அரசியல் ஆதரவுகளையும் முன்னர் வழங்கி வந்த உலகப் பெருநாடுகள் தமது பொருள் (2ஆம் பக்கம் பார்க்க)

# அனைத்துக் கட்சிக் குழுவின் 90 சதவீதப் பணிகள் பூர்த்தி

## அமைச்சர் திஸ்ஸ விதாரண லண்டனில் தெரிவிப்பு

(லண்டன்)

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அரசியல் அமைப்பு சீர்திருத்தங்கள் குறித்து ஆராய்ந்து வருகின்ற சர்வ கட்சிக் குழு தனது 90 வீதமான பணிகளைப் பூர்த்தி செய்து விட்டதாகவும் நிலைமை சுமுகமாகச் செல்லுமாயின் இன்னும் சில மாதங்களில் தமது பணி முழுமையாகப் பூர்த்தியடைந்து விடும் எனவும் அந்தக் குழுவின் தலைவரான அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி மகிந்தவின் அரசாங்கம் யுத்தமல்ல; வெறும் சத்தமே போடுகிறது

## ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் யுத்தம் அல்ல; வெறும் சத்தமே போடுகிறது. படையினரின் அர்ப்பணிப்பினை தனது இருப்புக்காக அரசாங்கம் பயன்படுத்துகின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

ஜே.வி.பியின் தேசப்பற்று என்ற மக்களை ஏமாற்றும் வேஷம் கலைந்து உண்மையில் தேசத் துரோகிகள் யார் என்பது மக்களுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் தற் (10 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

- வட மாகாண தமிழ்த் தினப் போட்டி- 2007 யாழ்.மாவட்ட முடிவுகள்
- சர்வதாரி வருடம் உங்களுக்கு எப்படி?

# வீரவன்ச உடனான முரண்பாட்டிற்கு அமைச்சர்கள் சிலரும் காரணம்

## சோமவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

விமல் வீரவன்சவுக்கும் ஜே.வி.பியின் மத்திய குழுவுக்குமிடையில் இடம்பெறும் கருத்து மோதல்களுக்குச் சில முதல்வர்களும் அரசாங்க அமைச்சர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களும் தொடர்புபட்டுள்ளதாக ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பிக் கட்சியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்சவின் கட்சி விரோத நடவடிக்கைகள் என்ன? என்பது தொடர்பாக ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் இதனைக் கூறியுள்ளார். இதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மக்களின் முன்பாக நாம் எமது தனிப்பட்ட நிலைப்பாட்டை முன்வைக்க முடியாது. ஆனால் கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் விமல் வீரவன்சவை ஒப்புக்கொள்ள வைக்க எங்களால் (10 ஆம் பக்கம் பார்க்க)

# சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதே இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு

## சிறிநாத் பெரேரா சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் மூலமாகவே இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். ஆனால் அரசாங்கம் அதனை உணர மறுக்கிறது என ஐக்கிய சோசலிச கட்சியின் சிறிநாத் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் சபையில் அங்கம் வகிக்கும் அவர், அரசாங்கத்தையும் அரச படைகளின் செயற்பாடுகளையும் கடுமையாகச் சாடியுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்று வரும் மோசமான மனிதஉரிமை மீறல்களில் இலங்கை இராணுவமே ஈடுபட்டு வருகின்றது. அரசாங்கம் இதனைத் (10 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ தனியரசு உருவாக நோர்வே ஆதரவளிக்காது

## ஜோன் ஹன்சன் பௌயர் தெரிவிப்பு

(ஒஸ்லோ)

தமிழீழ தனியரசு உருவாக்கப்படுவதற்கு நோர்வே ஒரு போதும் ஆதரவளிக்காது என விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயர் தெரிவித்துள்ளார். நோர்வேக்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தனவிடம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ தனியரசு உருவாக்கப்படுவதை நோர்வே ஒருபோதும் ஆதரிக்காது என்று ஜோன் ஹன்சன் பௌயர் தன்னிடம் கூறியதாக ஜெயலத் ஜெயவர்த்தன கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை நோர்வே இலங்கையில் (10 ஆம் பக்கம் பார்க்க)

# வடமாகாண தமிழ்த்தினப் போட்டியில் யாழ்ப்பாணத்திற்கு 27 முதலிடங்கள்

## முடிபுகள் இணையத்தளத்தில் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட 2007 ஆம் ஆண்டுக்கான மாகாண நிலை தமிழ்த்தினப் போட்டியில் யாழ்.மாவட்டத்திலிருந்து பங்குபற்றிய தனி மற்றும் குழுச் செயற்பாடுகளில் 27 முதலிடங்கள் கிடைத்துள்ளன.

தமிழ்த்தினப் போட்டியில் வெற்றியீட்டிய யாழ்.மாவட்ட பாடசாலைகளின் விபரங்கள் வருமாறு;

**வாசிப்பு:-** முதலாம் பிரிவு-இரண்டாமிடம் ம.துஷிதா (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி.);இரண்டாம் பிரிவு- மூன்றாமிடம் உ.குணசுகி (கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தி.).

**ஆக்கத்திறன் வெளிப்பாடு :-** முதலாம் பிரிவு-முதலாமிடம் பா.வினோஜன் (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி.).

**ஆக்கம்-எழுத்து:-** முதலாம் பிரிவு-இரண்டாமிடம் கு.கௌசிகா (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.).

**கட்டுரை வரைதல்:-** இரண்டாம் பிரிவு -இரண்டாமிடம் த.கோகுலன் (ஹாட்லிக் கல்லூரி). மூன்றாம் பிரிவு- இரண்டாமிடம் ஸ்ரீ.கேதிகா (தும்பளை சிவப்பிரகாசம் வித்தி.)

**கட்டுரை வரைதல்,இலக்கியம் நயத்தல்:-** நான்காம் பிரிவு-முதலாமிடம் தே.பிரணவன் (ஹாட்லிக் கல்லூரி).

**தமிழியற் கட்டுரை வரைதல்,இலக்கியம் நயத்தல்:-** ஐந்தாம் பிரிவு -இரண்டாமிடம் சி.ரம்யா (உசன் மகா.வித்தி.).

**இலக்கணப்போட்டி:-** நான்காம் பிரிவு-முதலாமிடம் சு.தாரணி (வேம்படி மகளிர் உயர் தரப்பாடசாலை).

**இலக்கணப்போட்டி:-** ஐந்தாம் பிரிவு-முதலாமிடம் கு.யஸ்மின் கிறிஸ்ரெலா (அருணோதயா கல்லூரி).

**குறுநாடக ஆக்கம் :-** நான்காம் பிரிவு-முதலாமிடம் அ.கோகுலன் (வரணி மகா. வித்தி). ஐந்தாம் பிரிவு -முதலாமிடம் வீ.இமாஜினி (ஸ்கந்தவரோதயா கல்லூரி).

**கவிதை ஆக்கம்:-** நான்காம் பிரிவு -முதலாமிடம் ஸ்ரீ.ரஜிபவன் (ஹாட்லிக் கல்லூரி). ஐந்தாம் பிரிவு -மூன்றாமிடம் ந.மதனிகா (பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.).

**பேச்சு:-** முதலாம் பிரிவு -இரண்டாமிடம் பா.சௌமியா (வதிரி திருஇருதயக் கல்லூரி) இரண்டாம் பிரிவு-முதலாமிடம் இ.சஞ்ஜீவ் (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வித்தி.) மூன்றாம் பிரிவு- முதலாமிடம் அ.உமாகரன் (யாழ்.இந்துக் கல்லூரி). நான்காம் பிரிவு -முதலாமிடம் உ.திருமாறன் (மகாஜனாக் கல்லூரி); ஐந்தாம் பிரிவு -முதலாமிடம் ச.கோபிநாத் (யாழ்.மத்திய கல்லூரி).

**பாவோதல்:-** முதலாம் பிரிவு -மூன்றாமிடம் வெ.நிஷோதன் (புனித பொஸ்கோ வித்தி.); இரண்டாம் பிரிவு -இரண்டாமிடம் ஜெ.மதுஷகன் (கொக்குவில் இந்துக் கல்லூரி); மூன்றாம் பிரிவு -மூன்றாமிடம் செ. அருள்ராஜ் (புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை); நான்காம் பிரிவு-முதலாமிடம் ந.துளசி (யாழ்ப்பாணக் கல்லூரி); ஐந்தாம் பிரிவு -இரண்டாமிடம் ஸ்ரீ.காயத்திரி (வேம்படி மகளிர் உயர் தரப்பாடசாலை).

**இசையும் அசைவும்:-** முதலாம் பிரிவு -மூன்றாமிடம் ம.ரம்யா (ஞானசாரியார் கல்லூரி).

**இசை தனி:-** இரண்டாம் பிரிவு -இரண்டாமிடம் ற.நிஷா (இராமநாதன் கல்லூரி); மூன்றாம் பிரிவு -மூன்றாமிடம் பு.பானுப்பிரியன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி); நான்காம் பிரிவு -முதலாமிடம் சு.தசாங்கன் (யூனியன் கல்லூரி); ஐந்தாம் பிரிவு -முதலாமிடம் செ.சந்திரிக்கா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி);

**இசை:-** குழு I- முதலாமிடம் - ஹாட்லிக் கல்லூரி; குழு II-முதலாமிடம் -சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**நடனம் -தனி :-** முதலாம் பிரிவு -முதலாமிடம் ந.அபிராமி (மகாஜனாக் கல்லூரி); இரண்டாம் பிரிவு முதலாமிடம் க.கௌதமன் (யாழ்.மத்திய கல்லூரி); மூன்றாம் பிரிவு-முதலாமிடம் லோ.மயூரதி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி); நான்காம் பிரிவு-முதலாமிடம் கி.பிரவீனா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி) ஐந்தாம் பிரிவு -இரண்டாமிடம் பா.தர்சனா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை).

**நடனம் :-** குழு I -முதலாமிடம்- யாழ்.மத்திய கல்லூரி.

**நாட்டிய நாடகம் :-** குழுII -(தி.போ.) இரண்டாம் இடம்-இராமநாதன் கல்லூரி .

**நாடகம்:-** (தி.போ.) மூன்றாமிடம்-உடுவில் மகளிர் கல்லூரி.

**வில்லுப்பாட்டு :-** (தி.போ.) முதலாமிடம்-யூனியன் கல்லூரி).

**தமிழறிவு வினா விடைப் போட்டி :-** (தி.போ) முதலாமிடம் -மகாஜனாக் கல்லூரி.

**முஸ்லிம் நிகழ்ச்சி:-** (தி.போ.) இரண்டாமிடம் -யாழ்.ஒஸ்மானியா கல்லூரி.

**வடமோடி:-** முதலாமிடம்-கைதடி நாவற்குழி அ.த.க.பா.

**தென்மோடி:-** முதலாமிடம்-யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம் ம.வி.

**சிந்துநடை:-** இரண்டாமிடம் -சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

**இசை நாடகம்:-** முதலாமிடம் மகா ஜனாக் கல்லூரி.

**விசேட கூத்து:-** முதலாமிடம் -யாழ்.விக்றோறியா கல்லூரி. (ச-5)

## க.பொ.த(சா/த) பரீட்சை முடிபுகள்

**உடுவில் மகளிர் கல்லூரி**

பவிதா கமலேந்திரன் (8ஏ,பி,சி); கலையரசி கணேசலிங்கம் (8ஏ,பி,சி); ராஜினி இராஜேந்திரன் (8ஏ,பி,சி); சுஜானி சந்திரகுமார் (8ஏ,பி,சி);விதுராஜா ராஜ்மோகன் (8ஏ,பி,சி).

சிவாஞ்சலி சிவசண்முகம்பிள்ளை (7ஏ, 2பி,சி); சாலினி பாலசிங்கம் (7ஏ,3பி); லக்ஷி பிரதாபன்(6ஏ,4பி); நிதர்சினி தர்மலிங்கம் (6ஏ,3பி,சி);மோபிகா மயில்வாகனம் (6ஏ,3பி, சி); தயானி கந்தையா (6ஏ,2பி,சி,எஸ்). (ச)

## லூப்பிக்கன் ஒயில் இலங்கையில் உற்பத்தி


(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் லூப்பிக்கன் ஒயில் எனப்படும் உராய்வு நீக்கி எண்ணெய் உற்பத்தியில் ஈடுபடவுள்ளதாக நிறுவனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் சுருவெல்ல தெரிவித்துள்ளார்.

நாட்டில் இடம்பெறும் மொத்த உராய்வு நீக்கி எண்ணெய் விநியோகத்தில் 40 சத வீதமான விநியோகத்தை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த எண்ணெய் உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடுவதன் மூலம் பெற்றோல் விற்பனையால் ஏற்படும் நட்டத்தினை ஈடு செய்து கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(ச-2)



கரவெட்டி வட மத்திய மகளிர் கல்லூரி வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டியிலே அதிபர் திருமதி எஸ்.சுகுமார் தலைமையிலே விருந்தினர்கள் பான்ட் வாத்திய இசையுடன் அழைத்து வரப்படுவதையும் மாணவிகள் ஒலிம்பிக் தீபம் ஏற்றுவதையும் பிரதம விருந்தினரான பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் வெற்றி வீராங்கனைகளுக்கு சான்றிதழ் வழங்குவதையும் படங்களில் காணலாம். (பரு.நிருபர்)

## இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு...

உதவிகளையும் தார்மீக ஆதரவுகளையும் படிப்படியாக நிறுத்தி வருகின்றன.

இதனால் அரசின் போர் இயந்திரம் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. இந்த நெருக்கடி நிலையைச் சமாளிக்க முடியாமல் அரசு தத்தளித்துக் கொண்டிருக்கும் இத்தகைய அரசியல் இராணுவச் சூழலில் இலங்கையின் இன அழிப்புப் போருக்கு இராணுவ உதவிகள் புரிந்து அரசியல் ஆதரவு கொடுக்க முற்படும் இந்திய அரசின் செயல் தமிழ் மக்களைக் கோபத்துக்குள்ளாக்கியுள்ளதுடன் சர்வதேச சமூகத்தையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

சிங்களப் படைகள் போரில் இழப்புக்களையும் பின்னடைவுகளையும் சந்திக்கும் போதெல்லாம் சிங்களத் தளபதிகள் அவசர அவசரமாக இந்தியப் பயணம் செய்வதும் அங்கு அரச தலைவர்களையும் இராணுவத் தளபதிகளையும் சந்திப்பது வழமையாகவுள்ளது.

தமிழரை இன அழிப்புக்குள்ளாக்குவதில் பொறுப்பாக நின்று செயற்படும் சிங்களத் தளபதிகளுக்கு செங்கம்பள வரவேற்பளிப்பதில் இந்திய ஆட்சிப் பீடம் அக்கறை காட்டுவதையும் உலகம் அவதானித்தபடியேயுள்ளது.

அரசின் போர் நடவடிக்கையுடன் இந்திய தேசிய நலனை இணைத்து அதிகாரிகள் வெளியிடும் உத்தியோகபூர்வ கருத்துக்கள் தமிழ் மக்களைப் புண்படுத்தி வருகின்றன. இலங்கைக்கு வேறு நாடுகளின் ஆயுதங்களால் இந்தியாவுக்கு ஆபத்து என்ற இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகரின் கருத்தும் சிங்களப் படைகள் சோர்ந்து போவதை இந்தியா விரும்பவில்லை என்ற இந்திய இராணுவப் பேச்சாளரின் கருத்தும் சிங்கள அரசுக்கு இராணுவ உதவிகள் புரிந்து வரும் இந்திய அரசின் நிலைப்பாட்டை நியாயப்படுத்த முனைகின்றன.

அரசின் போருக்கு உதவிகள் புரிந்து ஒத்தாசையாகவிருக்கும் அதேசமயம் அது ஆக்கிரமித்த தமிழர் நிலப் பகுதிகளில் பொருண்மிய நன்மைகளைப் பெற முயலும் சிறுமைத்தனத்திலும் இந்திய அரசு அக்கறை காட்டி வருகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் சம்பூர்ப் பகுதியைச் சிங்களப் படைகள் ஆக்கிரமித்த பின்னர் அங்கேயொரு அனல் மின்நிலையத்தை அரசுடன் இணைந்து நிறுவும் முயற்சிக்கு இந்திய அரசும் உடன்பட்டுள்ளது.

இதுபோன்று இந்தியாவிலுள்ள மின்பிறப்பாக்கி நிலையம் ஒன்றிலிருந்து தயாரிக்கப்படும் மின்சாரத்தை சிங்களப் படையின் ஆக்கிரமிப்பிலுள்ள தமிழர் நிலம் (தலைமன்னார்) வழியாக அநுராதபுரம் வரை எடுத்துச்சென்று விற்கும் ஒரு வாணிப ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடும் முயற்சியில் இந்திய அரசு ஈடுபட்டுள்ளது.

அரசின் நில ஆக்கிரமிப்புக்கு சர்வதேச அங்கீகாரம் கொடுக்க முனையும் ஒருஅரசியல் நடவடிக்கையாகவே இந்திய அரசின் இந்த வாணிப முயற்சிகள் அமைந்திருக்கின்றன. இவ்விதம் அரசுக்கு இராணுவ, அரசியல், பொருண்மிய உதவிகளை இந்திய அரசு நல்கி வருகின்றது.

இதனால்தான் இந்திய அரசின் அனைத்து வகை ஆதரவுடனும் சிங்கள அரசு செய்யும் தமிழினப் படுகொலைக்கு இந்திய அரசே பொறுப்பேற்க வேண்டும் என புலிகள் இயக்கம் குற்றஞ்சாட்டியிருந்தது.

இலங்கையில் போர் நிறுத்தப்பட வேண்டும். தமிழரின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே காணப்பட வேண்டும் என்று இந்திய அரசு விடுக்கும் அறிக்கைகளை வெறும் வாய்ச் சொற்களாகவே தமிழ் மக்கள் பார்க்கின்றனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## 'சுகவாழ்வு' பொதுவிரிவுரைத் தொடர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் புற நிலைப்படிப்புக்கள் அலகின் ஏற்பாட்டில் சுகவாழ்வு எனும் தலைப்பிலான பொது விரிவுரைத் தொடர்-05, எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம் பெறவுள்ளது.

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைப் பொது மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.சிவன்சுதன் தலைமையில் இடம் பெறவுள்ள இவ் விரிவுரையினை யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை பொது மருத்துவ வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி ரி.பேரானந்தராஜா 'சிறுநீரக நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வது எப்படி?' எனும் தலைப்பில் ஆற்றவுள்ளார்.

ஆர்வமுள்ள பொதுமக்கள், பல்கலைக்கழக சமூகத்தினர் வருகை தந்து பயன் பெற முடியுமென புற நிலைப்படிப்புக்கள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தெரிவிக்கின்றார்.

(ச)

# இன்று ஒரு தகவல்

## ஆறுவகைப் பயம்

"எதிர்காலத்தை நினைத்தால் பயமாக இருக்கிறது" என்று சொல்பவர்கள் பலர் இருக்கிறார்கள். பயப்படாத மனிதர்கள் யாருமே கிடையாது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான பயம் இருந்தாலும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் பொழுது மனிதருக்கு ஆறுவிதமான பய உணர்வு ஏற்படலாம் எனப் பெரியவர்கள் கூறுகிறார்கள்.

அந்த ஆறுவகைப் பயமும் ஆறு எதிரிகள் மாதிரி. இந்த ஆறு எதிரிகளையும் புரிந்து கொண்டால் வாழ்க்கையில் சுலபமாக வெற்றியடையலாம்.

இந்த ஆறு பயங்களையும், "வறுமை பற்றிய பயம்; பழிச்சொல் பற்றியபயம்; உடல் நலப் பாதிப்புப் பற்றிய பயம்; காதல் தோல்வி பற்றிய பயம்; முதுமை பற்றிய பயம்; மரணபயம்" என வரிசைப் படுத்தியிருக் கிறார்கள்.

பயப்படுவது என்பது ஒரு மனநிலை. இந்த மனநிலையைக் கட் டுப்படுத்த முடியும். திசை திருப்பமுடியும். இந்த ஆறு வகைப் பயங்களின் அறிகுறிகள் யாவை என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

எதிலேயும் அக்கறை இல்லாமல் இருப்பது; ஒரு குறிக்கோள் இல்லாமல் இருப்பது; வறுமையைச் சகித்துக் கொள்வது;. வாழ்க்கையில் கிடைப்பது எதுவாக இருந்தாலும் ஆட்சேபனை இல்லாமல் ஏற்றுக்கொள்வது; மனதாலும் உடலாலும் சோர்ந்து போய் இருப்பது; ஆர்வம், முனைப்பு, கற்பனைத் திறன் எதுவுமே இல்லாமல் இருப்பது என்பன வறுமை பற்றிய பயத்தின் அறிகுறிகளாகும்.

"அடுத்தவர்கள் நம்மைப் பற்றிக் குறை சொல்லி விடுவார்களோ என்றபயம்; புதியவர்களைச் சந்திக்கப் பயம்; முடிவு எடுக்க முடியாமல் குழம்புவது; பிரச்சினைகளைத் தவிர்க்க விரும்புவது; தாழ்வு மனப்பான்மை; வரவுக்கு மீறி செலவு செய்து "இமேஜை" உயர்த்திக் கொள்வது; குறிக்கோள் இல்லாத வாழ்க்கை" என்பன பழிச் சொல் பற்றிய பயத்தின் அறிகுறிகள்.

அடுத்தது நோய்பற்றிய பயம். டாக்டரைச் சந்திக்கிற மனிதரில் 75 சதவீதத்தினர் தங்களுக்கு நோய் வந்து விட்டது என்கிற கற்பனையில் இருப்பவர் என்பது உண்மை. "வியாதிக்கான அறிகுறிகள் தன்னிடம் இருப்பதாக நினைத்துக் கொள்வது; எந்நேரமும் வியாதியைப் பற்றிப் பேசிப் பேசி மனதை அங்கேயே வைத்திருப்பது; நோய் சம்பந்தமான செய்திகளைப் படித்து நமக்கு இப்படி ஆகிவிடுமோ என்று வேதனைப் படுவது என்பன நோய் பற்றிய பயத்துக்கான அறிகுறிகள்.

காதல் தோல்வி பற்றிய பயம் மிகவும் வேதனையானது. உடலையும் மனதையும் சீரழித்துவிடும். ஆண்களை விடப் பெண்கள்தான் இந்தப் பய உணர்வில் அதிக மாகப் பாதிக்கப்படுகிறார்கள். ஐந்தாவது முதுமை பற்றிய பயம். ஆறாவது மரணபயம். வயதான காலத்தை சமாளிப்பது எப்படி? சுதந்திரமாக சுயமாக செயற்பட முடியாதே என்ற நினைப்பு.

மரணபயம் எல்லாருக்கும் பொதுவானது. தவிர்க்க முடியாதது. எனவே இதை ஏற்றுக்கொள்கிற மனப்பக்குவம் வேண்டும். இன்றைய இளைஞர்கள் இந்த ஆறு வகைப் பயங்களையும் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

சரியாகப் புரிந்துகொள்ளும் போது பயமும் தானாக விலகிச் சென்றுவிடும். வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கு இந்தப் பயங்கள் முட்டுக்கட்டையாக ஆகிவிடக் கூடாது.

உற்சாகமாக மனதை வைத்துக்கொள்ள வேண்டும். மனதைக் கட்டுப்படுத்துகிற மார்க்கத்தைத் தெரிந்து கொண்டால் போதும். எல்லாம் சரியாக வந்து விடும்.

ஒருவன் சொன்னான்– "சார்! எனக்கு வறுமை பற்றிய பயம்தான் இருந்தது. ஒரே ராத்திரியில் முப்பதாயிரம் ரூபா தயார் பண்ணிவிட்டேன். இப்போது எனக்கு இன்னொருபயம் வந்துவிட்டது"

"என்ன பயம்?" என்று கேட்டேன். "பொலிஸ் கண்டு பிடித்துவிடுமோ என்கிறபயம்" என்றான் அவன்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# தேசிய இளைஞர் சேவை மன்ற இளம் விருது வழங்கல் போட்டிகள்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடாத்தும் 2008ஆம் ஆண்டிற்கான மாவட்ட இளம் விருது வழங்கல் போட்டிக்கான தமிழ் மொழி மூல விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப் போட்டிக்கு 2008-05-05 அன்று 15 இலிருந்து 29 வயதிற்கு உட்பட்ட இளைஞர் யுவதிகள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் மே மாதம் 05ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக உதவி இயக்குநர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், மாவட்ட அலு வலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

போட்டிகள் பற்றிய விபரங்கள் வருமாறு,

**நாவல்:-** குறைந்தது 25ஆயிரம் சொற்கள்.

**சிறுகதை:-** 1250-1500க்கும் இடைப்பட்ட சொற்கள்.

**கவிதை:-** 50-60 வரிகளுக் குள் அல்லது 15-20 கவிதைவரிகள்.

**பொதுக்கட்டுரை:-** 750-1500க்கு இடைப்பட்ட சொற்கள்( விண்ணப்பம் கிடைத்த பின்னர் தலையங்கம் அறிவிக்கப்படும்).

**பாடல் இயற்றுதல்:-** எந்தவொரு தலையங்கத்தின் கீழ் இயற்றப்பட்ட பாடலையும் முன்வைக்கலாம் (கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல், பாடல் இயற்றுதல் அனைத்திலும் 03 பிரதிகள் விண்ணப்பத்துடன் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

கட்டுரை, சிறுகதை, நாவல், பாடல் இயற்றுதல், கவிதை- தமிழ் மொழியிலும் நடத்தப்படும்.

**சாஸ்திரிய இசை:-** தபேலா, புல் லாங்குழல் , சித்தார், வயலின், வீணை, மிருதங்கம் போன்ற துறைகள்.

**மேற்கத்திய இசை:-** கிட்டார், ஓகன், டிரம்ஸ், செக்ஸ்போன் போன்ற துறைகள்.

**மேளம் இசை:-** கண்டிய மேளம், கரையோர மேளம், தவில் மற்றும் தம்பட்டம்.

**மக்கள் பாடல்:-** தனி (குறைந்தது 6 நிமிடங்கள்)

**சித்திரம்:-** வெளியீட்டு சித்திரம், சம்பிரதாய சித்திரம் மற்றும் கிராபிக் துறைகளில் (எண்ணெய் சாயம், வோட்டர் கலர்ஸ் அல்லது கலப்புத் துறையை பயன்படுத்தலாம்)

அளவு அங்குலம் 17X24 ஆக இருக்கவேண்டும். கண்ணாடி பிரேம் போடாது கையளிக்கப்பட வேண்டும்.

**சிலை சிற்பம்:-** மரம், உலோகம், அல்லது சுட்டமண் (டெராகொட்டா) போன்றவற்றை பயன்படுத்தலாம்.

**புகைப்படத்துறை:-** கறுப்பு வெள்ளை, வர்ணம் போன்ற இரண்டின் கீழ் நடைபெறும்.

(அளவு குறைந்தது அங்குலம் 10X12 கூடியது 10X20 ஆக இருக்க வேண்டும்.

**விசேட நாடகத்துறை:-** நடிப்பு 3 நிமிடங்கள் மற்றும் 5 நிமிடங்களுக்குள் அடங்க வேண்டும் (வசனங்கள் பேசப்படாத (அபிநய நடிப்பு)

**செயற்பாட்டு நாடகம்:-** காலத்திற்கு உகந்த தயாரிப்பிற்கு சந்தர்ப்பம் சம்பவம் அல்லது கதை தயாரிக்கப்படவேண்டும். (காலம் 10-20 நிமிடங்களுக்குள்)

சித்திரம், சிலை, சிற்பம், புகைப்படம் போன்ற போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கிடைத்த பின்னர் எவ்வாறு நிர்மாணிக்கப்படவேண்டுமென்பது அறிவிக்கப்படும்.

**ஒலிபரப்புத்துறை:-** சிங்களம் தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் இடம்பெறும்.

**இளம் பாடகர்கள்:-** பரதநாட்டியம், கதக் மக்கள் கலை புதிய படைப்புகளுடன் நடனம் தனித்து குழுவினருடன் முன்வைக்கலாம் (காலம் 5-7 நிமிடங்கள்)

குழுவாக பங்குபற்றும் போட்டியாளர்கள் 5 அல்லது 10 ஆக இருக்க வேண்டும். ஆண் பெண் சம அளவு பங்களிப்பு அவசியம்.

1. **பரத நாட்டியம்:-** தனித்து (மகளிர்) அலாரிப்பூ மற்றும் ஜதீஸ்வரம் தனித்து (ஆண்) அலாரிப்பூ மற்றும் ஜதீஸ்வரம் (10 நிமிடங்கள்)
2. **கதக்:-** தனித்து (மகளிர்) பரண் மற்றும் டுக்கடா சாயலில் தாரணா சதுரங்க.

தனித்து (ஆண்) பரண் மற்றும் டுக்கடா சாயலில் தாரணா சதுரங்க (10 நிமிடங்கள்)

3. **புதிய படைப்புக்கள்:-** கலப்பு (இதுவரையில் புதிய படைப்புகளாக தயாரிக்கப்பட்ட துறை அல்லது பிரபல்யமான பாடல்கள் அடிப்படையில் முன்வைக்கப்படும் நடனங்கள் சமர்ப்பிக்கலாகாது) தமது படைப்புக்கு ஏற்ற விதத்தில் சங்கீதத்தை பயன்படுத்தி புதிய தயாரிப்பை பாத்திரத்தை முன்வைக்க வேண்டும்.

சந்தர்ப்பம் அல்லது மக்கள் வழ்க்கையும் இணைந்த தயாரிப்பை இப் போட்டியில் எதிர்பார்க்கப்படுகின்றது. காலம் 07 நிமிடங்கள் (ஆண் பெண் சம அளவில் 6 குறைந்தது 12 பேர்).

மேலதிக விபரங்களை 021 222, 2526 என்ற தொலை பேசி இலக்கத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். (ஓ)

## இராசிபலன்

15.04.2008
(சித்திரை 03, செவ்வாய்க்கிழமை)
ஆயிலியம் முற்பகல் 10.39மணிவரை
தசமி பிற்பகல் 01.56 மணி வரை
இராகுகாலம் 03.04-04.34 மணிவரை
சுபநேரம் 10.34-12.04 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | தேக ஆரோக்கியம், எடுத்த காரியம் கைகூடும், மனமகிழ்ச்சி. |
| இடபம் | முயற்சி தாமதம், குடும்பக் கவலை, வேலைச்சுமை. |
| மிதுனம் | உடல்சோர்வு, தொழில் ஆர்வம், வாகனசுகம், உறவினர் சந்திப்பு. |
| கடகம் | பிரயாண நன்மை, நினைத்த காரியம் கைகூடும், தனலாபம். |
| சிங்கம் | கற்பனைமிகுதி, விவாதம், காரியதாமதம், அதிகசெலவு. |
| கன்னி | நண்பர்கள் சந்திப்பு, விருந்துபசாரம், நல்லமுயற்சி, போசனசுகம். |
| துலாம் | உறவினர் மனஸ்தாபம், எதிர்பாராத நன்மை, சயனசுகக்குறைவு. |
| விருச்சிகம் | எடுத்த காரியம் கைகூடும், உறவினர் உதவி, போசனசுகம். |
| தனுசு | புதிய விடயம், தொழில் மேன்மை, நண்பர்கள் உதவி, பணவருவாய். |
| மகரம் | அதிக பிரயாசை, எதிர்பாராத செலவு, பிரயாணம், முயற்சி தாமதம். |
| கும்பம் | புனல் வியாதி, வீண் பிரச்சினை, வாகனபயம், வேலைச்சுமை. |
| மீனம் | திடீர் பயணம், செல்வாக்கு, பொருள் சேர்க்கை, நண்பர்கள் உதவி. |

வளவன்



பாலகணபதி துணை
அல்வாய் சாமணந்தறை
ஆலடிப்பிள்ளையார் கோவில் மஹோற்சவம்
5ஆம் நாள் மஞ்சத் திருவிழா
(15.04.2008)
பூங்குயில் கூவிக் குதுகலிக்கும் புலர்வேளை
பைங்கிளிகள் பாட்டிசைக்கும் பசுஞ்சோலை - ஆங்குயர்
ஆலடியில் அருளாட்சி ஓங்கும் ஐங்கரனின்
காலடியை பணிவோம் கதியென்றே
மீகாமனில்லா படகாகி மூள்கும் நிலையில்லா
வாழ்வாகி வளம் பெருகிட வரம்தருவாய்
பாகின் சுவை கண்டுமுறுவல் முகம் காட்டும்
ஞானத்தின் ஒளிவீசும் ஓங்கார ரூபன்
ஆகும் காரிய வெற்றிதரும் சித்தி விநாயகனே
வாயில் தேன் சிந்திட சிரித்திடும் சிங்காரனே
நோகும் மனப்புண் ஆற்றும் ஐங்கர நாயகனே
நாடுவார் மனக் குறை நீக்குவாய் நிருத்திகனே
(1052) அல்வாயூர் சி.சிவநேசன்




தென்மராட்சி கல்வி வலயத்தினரால் சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண் டபத்தில் நடாத்தப்பட்ட தமிழ் மொழித்தின விழாவில் நடைபெற்ற இராவண மன்னனின் வரலாற்று நாடகத்தில் பங்கேற்ற மாணவர்களுடன் பிதம விருந் தினராகக் கலந்துகொண்ட கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அதிபர் ஆ. சிறீஸ்கந்த மூர்த்தி மற்றும் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேத நாயகம் ஆகியோருடன் தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத் தினர் வலயத் துக்குட்பட்ட பாடசாலை அதிபர்கள் சிலரையும் காணலாம்.

## மணவாளக் கோலம்

(பருத்தித்துறை)

புற்றளைச் சித்திவிநாயகராலய வருடாந்த மணவாளக் கோலச் சங்காபிஷேகம் எதிர்வரும் 19ம் திகதி சனிக் கிழமை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் காலை 1008 சங்குகளில் அபிஷேகம் நடைபெறும். சிவஸ்ரீ சோ. ஜெயபாலசுந்தரக் குருக்கள் சங்காபிஷேகத்தை நடாத்திவைப்பார்.

நண்பகல் விநாயகப் பெருமான் வீதி உலா இடம் பெறும். (ஓ-52)

## மூலிகை மருத்துவ கண்காட்சி பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் ஜக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் ஏற்பாட்டில் யாழ். பல்கலைக் கழக சித்தமருத்துவத்துறை நடாத்தும் மூலிகை மருத்துவக் கண்காட்சி இம் மாதம் 25ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை நடாத்தப்படும் என சித்த மருத்துவ ஒன்றியம் அறிவித்துள்ளது.

21ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை நடாத்தப்பட விருந்த இக்கண்காட்சி பாடசாலைகளில் 21ஆம் திகதி ஆரம்பமாக உள்ளதால் மாணவர்கள் இக்கண்காட்சியைப் பார்வையிடுவதில் சில அசௌகரியங்கள் ஏற்படும் என்பதைக் கருத்திற் கொண்டு பிற்போடப்பட்டுள்ளதாக சித்த மருத்துவ ஒன்றியம் இத்தீர்மானத்தை எடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளது. (ஓ)

## அதிபர், ஆசிரியர்களுக்கான திட்டமிடல் கருத்தரங்கு

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கு முதன்மை அசிரியர்களுக்குமான கல்வி அபிவிருத்தி தொடர்பான திட்டமிடல் கருத்தரங்கு 16 ஆம் திகதி புதன்கிழமை காலை 9மணிக்கு சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி. இராசையா, கல்வித்திட்டமிடல் பணிப்பாளர் வி.மகேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்க உள்ளனர்.

அதிபர்கள், முதன்மை ஆசிரியர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ)

## வன்செயல்களால் உயிரிழந்தவர்களின் மரண செலவுக்கு கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

கடந்த காலத்தில் இடம்பெற்ற வன்செயல்கள் காரணமாக இறந்தவர்களின் குடும்பத்திற்கு மரணச்செலவுக் கொடுப்பனவாக 10ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலிருந்த 11.08.2006 க்குப் பின் இடம்பெற்ற வன்செயல்களின் காரணமாக இறந்தவர்களின் குடும்பத்தினருக்கே இத்தொகை வழங்கப்படவுள்ளது.

இது சம்பந்தமான விபரங்களையும் மற்றும் இறந்தவர்களுடைய உரித்தானவர்களிடம் உறுதிச் சீட்டில் கையொப்பம் பெற்று செயலகத்திற்கு அனுப்பும் படியும் பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

# பருத்தித்துறை பிரதேச செயலக கலை இலக்கியப் போட்டி முடிவுகள்

பருத்தித்துறை பிரதேச செயலகத்தால் நடாத்தப்பட்ட கலை இலக்கிய விழாப் போட்டிகள் பிரதேச செயலகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. அக்கலை இலக்கிய விழாப் போட்டிகளின் முடிபுகள் வருமாறு.

**சிறுகதை (ஆங்கிலம்-திறந்த பிரிவு)**

1ஆம் இடம் - இரா.பஞ்சலிங்கம்- பருத்தித்துறை.

**சிறுகதை (திறந்த பிரிவு)**

1ஆம் இடம்-ஆர்.சச்சிதானந்தம் (தும்பளை), 2ஆம் இடம்- திருமதி. ஆ.தேவகுமார் (தும்பளை தெற்கு), 3ஆம் இடம்-கே.கோகுலரதன் (தும்பளை தெற்கு).

**கட்டுரை (சிரேஷ்ட பிரிவு)**

1ஆம் இடம்-எஸ்.பிருந்தா (வட-இந்து மகளிர்கல்லூரி), 2ஆம் இடம்- எம்.நிரோசா (வட-இந்துமகளிர்கல்லூரி), 3ஆம் இடம்- ஆர்.கிருஸ்ணப்பிரியா (புற்றளை மகாவித்தியாலயம்).

**கட்டுரை (கனிஷ்ட பிரிவு)**

1ஆம் இடம்-எஸ்.பிரசாந் (புற்றளை மகா வித்தியாலயம்), 2ஆம் இடம்-தீபகா (புற்றளை மகா வித்தியாலயம்).

**கவிதை (சிரேஷ்ட பிரிவு)**

1ஆம் இடம்-ஆர்.மயூரி (சென்தோமஸ். றோ.க.பெ.பாடசாலை பருத்தித்துறை), 2ஆம் இடம்-எஸ்.நிலாஜினி (மெ.பெ. உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை), 3ஆம் இடம் -ஆர். கிருஷ்ணப்பிரியா (புற்றளை மகாவித்தியாலயம்),

**கவிதை (கனிஷ்ட பிரிவு)**

1ஆம் இடம் - எம்.மிதுஷா (மெ.பெ. உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை), 2ஆம் இடம்- ஏ.கொன்சித்தா (சென்.தோமஸ்றோ.க.பெண்கள் பாடசாலை, பருத்தித்துறை), 3ஆம் இடம்- எம்.ஜீவநாயகி -(சென்தோமஸ் றோ.க.பெண்கள் பாடசாலை பருத்தித்துறை).

**கவிதை (திறந்த பிரிவு)**

1ஆம் இடம்-பீ.வேதநாயகம் (தும்பளை தெற்கு), 2ஆம் இடம்-ஆர்.திருத்துவராஜா (அல்வாய்), 3ஆம் இடம்-கே.கோகுலரதன் (தும்பளை தெற்கு). (ஓ-52)




# முக்கிய சந்தேக நபர் வழங்கிய தகவல்களையடுத்து மேலும் மூவர் கைது

வடமராட்சியில் நடைபெற்ற கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக இரண்டு ஆண்களும், ஒரு பெண்ணும் நெல்லியடிப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சியில் இடம்பெற்று வந்த கொள்ளைகள் சம்பந்தமான முக்கிய நபர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவர் வழங்கிய தகவல்களையடுத்தே இம் மூவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இச் சந்தேக நபர்கள் பருத்தித்துறை நீதிபதி கே. அரியநாயகம் முன்னிலையில் பொலிஸாரினால் ஆஜர் செய்யப்பட்டனர். நீதிபதி அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதுதொடர்பாக பொலிஸார் இன்னும் சிலரைத் தேடி வருகின்றனர். (அ-52)

# தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இளம் நாடகத்துறைப் போட்டி

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடாத்தும் 2008 ஆம் ஆண்டிற்கான 'இளம் நாடகத்துறை போட்டி'க்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் 2008.05.05 அன்று 15க்கும் 35 க்கும் இடைப்பட்ட வயதுடையோராக இருக்கவேண்டும்.

இப்போட்டியில் நாடகம், குறுநாடகம் என இரு துறைகளில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**குறுநாடகப் போட்டி**

இவற்றுள் குறுநாடகப் போட்டிக்கு விண்ணப்பிப்போர், இப் போட்டிகள் மாவட்ட ரீதியில் இடம்பெறுவதால் தமது படைப்பின் 3 பிரதிகளை 2008.05.05 க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக உதவிப் பணிப்பாளர், தேசிய இளைஞர் மன்றம், மாவட்ட அலுவலகம் யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். குறுநாடகம் 15முதல் 30 நிமிடங்களாக இருக்க வேண்டும்.

**நாடகப் போட்டி**

நாடகப் போட்டிக்கான விண்ணப்பத்துடன் தமது படைப்பில் 3 பிரதிகளை 2008.05.05 திகதிக்கு முன்பு பிரதிப் பணிப்பாளர், அழகியற்கலை திறன் அபிவிருத்திப் பிரிவு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், கைலெவல் வீதி, மகரகம என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

இப் போட்டிக்கான மேலதிக விபரங்களை 021 222 2526 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம். (ஓ)

## 'பக்ஸ்' இயந்திரம் அன்பளிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் இளைப்பாறிய ஆசிரியை திருமதி ஜோ.தியாகலிங்கம் பாடசாலைக்கு பக்ஸ் இயந்திரமொன்றை அன்பளிப்புச் செய்துள்ளார். பாடசாலை அதிபர் திருமதி. எஸ். சுந்தரேசன் இப் பக்ஸ் இயந்திரத்தைக் கையேற்றுக் கொண்டார். (ஓ-52)

## நோயாளர்களுக்கான யோகாசன வகுப்புகள்

(நல்லூர்)

யாழ்ப்பாணம், சிவலிங்க யோககேந்திரா நிலையத்தினரால் நடாத்தப்படும் யோகாசன வகுப்புகளில் நோயாளர்களுக்கான விசேஷ வகுப்புகள் எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை 4.30 மணிக்கு கந்தர்மடம், வேதாந்தமடத்தில் சிவலிங்க யோககேந்திரா செயலாளர் கி.சோதிமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இப் பயிற்சி நெறியில் இருபாலாரும் கலந்துகொள்ளலாம். அத்துடன் நோயாளரைத் தரம் பிரித்து தனித்தனியே பயிற்சிகள் வழங்கப்படும். இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்புவோர் வேதாந்தமடத்தில் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (ஓ)

## றொகான் இராஜசிங்கம் ஞாபகார்த்த ஹொக்கிப் போட்டி

றொகான் இராஜசிங்கம் ஞாபகார்த்த ஹொக்கிப் போட்டிகள் இன்று செவ்வாய்க் கிழமை பி.ப 2மணிக்கு யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் சுன்னாகம் றோட்டரிக் கழகத் தலைவர் கே.ஜெகிந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பிரதம விருந்தினராக யாழ்.றோட்டரிக் கழகத் தலைவர் என்.பாலசுப்பிரமணியம், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக உடற்கல்விப் பிரிவின் இணைப்பாளர் கே. கணேசநாதன், வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் என்.நடராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

பி.ப.2.30 மணிக்கு நடைபெறவுள்ள மூன்றாம் இடத்துக்கான போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணி எதிர் ஓல்ட்கோல்ட் அணியும், பி.ப.3.30 மணிக்கு இடம்பெறும். முதலாம் இடத்துக்கான போட்டியில் கிராஸ் கொப்பேர்ஸ் எதிர் பல்கலைக்கழக உடற்கல்வி அணியும் விளையாடவுள்ளன. (அ-6)

## பரீட்சை நிலைய மாற்றம்

(யாழ்ப்பாணம்)

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் வகுப்பு IIக்கு ஆட்சேர்ப்பதற்காக 17 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவிருந்த, பரீட்சை தவிர்க்கமுடியாத காரணத்தினால் அண்மையிலுள்ள திருக் குடும்ப கன்னியர்மடம் மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகள் திருக்குடும்ப கன்னியர்மடம் மகாவித்தியாலயத்தில் பரீட்சைக்குத் தோற்றுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (அ)

## குழுப் படங்களை பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

நுண்கலைப்பீட இறுதிவருட (2002/2003) மாணவர்களின் துறைசார்ந்த குழுப் படங்களுக்கு பதிவு செய்வர்கள் தங்களது புகைப்படங்களை நுண்கலைப்பீட கவின் கலை மன்றத்தில் இன்றிலிருந்து 18ஆம் திகதி வரை காலை 8.30 தொடக்கம் பி.ப. 1.30 மணிவரை பெற்றுக்கொள்ள முடியும் என கவின்கலை மன்றச் செயலாளர் அறிவித்துள்ளார். (அ-7)




வர்த்தக வங்கியின் "அருணலு" பரிசுத் திட்டத்தின் கீழ் நெல்லியடி வர்த்தக வங்கியின் 5ஆம் ஆண்டு புலமைப் பரீட்சை பரிசில் வழங்கும் விழாவிற்கு சுவாமி சித்ரூபானந்தா ஆசியுரை நிகழ்த்துவதையும், வங்கி முகாமையாளர் எஸ்.கே.குலசிங்கம் தலைமையுரை நிகழ்த்துவதையும், கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் உரையாற்றுவதையும், வங்கி உதவி முகாமையாளர் எஸ். இராஜமனோகரன் பரிசில்களை வழங்குவதையும் காணலாம். (படங்கள்: -பருத்தித்துறை நிருபர்)

# அமெரிக்காவைத் தாக்குவதற்கு பாகிஸ்தான் தீவிரவாதிகள் திட்டம்

## அதிபர் புஷ் தெரிவிப்பு

(வேஷிங்டன்)

பாகிஸ்தானில் உள்ள தீவிரவாதிகள் 2001ஆம் ஆண்டு செப்டெம்பர் 11ஆம் திகதி பாணியில் அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தலாம் என்றும் அதற்காக அவர்கள் திட்டம் தீட்டியுள்ளனர் என்றும் அமெரிக்க ஜனாதிபதி தெரிவித்து இருக்கிறார்.

**செப்டெம்பர் 11ஆம் திகதி தாக்குதல்**

கடந்த 2001ஆம் ஆண்டு செப்டெம்பர் 11ஆம் திகதி அல்கொய்தா தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் நியூயோர்க் நகரில் 111 மாடிகள் கொண்ட இரட்டை கோபுர கட்டடங்கள் தகர்க்கப்பட்டன. இதில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பலியானார்கள் . விமானத்தை கடத்தி அவற்றை அந்த கட்டடங்களின் மீது மோதச் செய்ததன் மூலம் இந்த தாக்குதல் நடத் தப்பட்டது. அப்போது இந்த தாக்குத லுக்கான திட்டம் ஆப்கானிஸ்தானில் தான் தீட்டப்பட்டது. அதை அங்கு வசித்த பின்லேடன் தான் தீட்டி செயல்படுத்தினார்.

இந்த நிலையில் அதே பாணியில் மேலும் ஒரு தாக்குதலை நடத்த தீவிரவாதிகள் திட்டமிட்டு இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி புஷ் தெரிவித்து இருக்கிறார். அவர் இது பற்றி அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது,


**பாகிஸ்தான் தீவிரவாதிகள்**

பாகிஸ்தான் நாட்டில் தங்கி இருக்கும் தீவிரவாதிகள் அமெரிக்கா மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டு இருக்கிறார். முந்தைய தாக்குதலின் பாணியில் இது இருக்கும் தீவிரவாதிகள் திட்டமிட்டால் அதை நிறைவேற்றியே தீருவார்கள் எனவே அதை எதிர்கொள் ளவும் நடைபெறாமல் தடுக்கவும் அமெரிக்கா தயாராக இருக்கவேண்டும்.

ஆப்கானிஸ்தானில் அல்கொய்தா இயக்கத்தை சமாளிப்பதற்கு போதுமான இராணுவ பலம் நம்மிடம் உள்ளது. கூடுதல் இராணுவம் ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

**ஈரான் மீது தாக்குதல் நடத்தும் எண்ணம் அமெரிக்காவுக்குக் கிடையாது**

ஈரான் அணு ஆராய்ச்சியில் ஈடுபடாமல் தடுப்பதற்காக அந்த நாட்டின் மீது தாக்குதல் நடத்தும் எண்ணம் அமெரிக்காவுக்கு கிடையாது இந்த ஆராய்ச்சி மூலம் ஈரான் அணு ஆயுதம் தயாரிக்கும் வல்லமையை பெற்றுவிட்டது என்பதை உலகத்துக்கு தெரிவிக்க வேண்டிய பொறுப்பு அமரிக்காவுக்கு உள்ளது எனவே இந்த பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. ஈராக்கில் உள்ள அமெரிக்க இராணுவ வீரர்களின் எண்ணிக்கையை வருகிற ஜுலை மாத இறுதியில் ஒரு லட்சமாக



குறைக்க வாய்ப்பு கிடையாது. ஈராக்கில் ஊடுருவும் ஈரான் வீரர் கள் என்னென்ன நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள் என்பது அமெரிக்காவுக்கு தெரி யும் தொடர்ந்து ஈரான், ஈராக்கில் அத்துமீறிய செயல்பாடுகளில் ஈடுபட்டால் அவர்களை பிடித்து கொல்லும் நடவடிக்கையில் அமெரிக்க இராணுவம் ஈடுபடும்.

ஒலிம்பிக் போட்டியை ஒரு அரசியல் நிகழ்வாக நான் பார்க்கவில்லை. அது ஒரு விளை யாட்டு நிகழ்ச்சி. ஒலிம்பிக் விழாவில் நான் கலந்து கொள்வேன் இவ்வாறு புஷ் கூறினார். (அ-5)

# கென்யாவில் எதிர்க்கட்சிகளுடன் கூட்டணி ஆட்சி அமைக்க ஆளும் கட்சி முடிவு

(நைரோபி)

கென்யாவில்எதிர்கட்சிகளுடன்கூட்டணிஆட்சி அமைக்க ஆளுநங் கட்சி முடிவு செய்துள்ளது.

கென்யாவில் சமீபத்தில் அதிபர் தேர்தல் நடந்து இதில் எதிர்கட்சி வெற்றி பெற்றது.

ஆனால் இதை ஆளுநங் கட்சி ஏற்க மறுத்தது. இதனால் கென்யாவில் பயங்கர கலவரம் ஏற்பட்டது. 1,500 பேர் கொல்லப்பட்டனர். அங்கு அமைதி ஏற்படுத்த ஐ.நா. சபை முயற்சித்து இதையடுத்து இரு கட்சிகளும் சமாதானம் அடைந்தன. எதிர்க்கட்சிகளையும் சேர்த்து கூட்டணி ஆட்சி அமைக்க அதிபர் கிபாகி சம்மதம் தெரிவித்தார். அதன்படி பிரதமர் பதவி எதிர்க்கட்சி தலை வர் ஒடிங்காவுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதேபோல பல முக்கிய இலாகாக்களும் எதிர்க்கட் சிக்கு வழங்கியுள்ளனர். (அ-5)

# ரோம் நகரில் சிவப்பு விளக்கு பகுதியை ஏற்படுத்துவேன்- நகரசபை தேர்தல் வேட்பாளர்

(ரோம்)

இத்தாலி நாட்டில் உள்ள ரோம் நகர சபைக்கான தேர்தலில் நிர்வாண நடிகை டி அபராசியோ போட்டியிடுகிறார்.40 வயதான அவர் தன் அழகை வெளிப்படுத்தும் போஸ்டர்களை அடித்து ஒட்டி வாக்கு கேட்டு இருக்கிறார். அவர் தேர்தல் பிரசாரத்தின் போது, என்னை வெற்றி பெறச் செய்தால், நான் ரோம் நகரில் சிவப்பு விளக்கு பகுதியை ஏற்படுத்துவேன், நிர்வாண நடன விடுதிகளை உரு வாக்குவேன், செக்ஸ் கடைகளை அமைப்பேன் இந்த வசதிகளை எல்லாம் கொண்ட காதல் நகரை அமைப்பேன் என்று வாக்குறுதி அளித்து இருக்கிறார்.

மக்களுக்கு இந்த அரசியல் வாதிகளின் முகங்களை பார்த்து பார்த்து புளித்து போய் விட்டது என்றும் இவர் சொல்கிறார். (ஆ-5)

# நக்சலைட்டுகளைக் கட்டுப்படுத்துவதில் ஆன்மீகம் பெரும் பங்காற்ற முடியும்

## ஆன்மீகக் குரு ரவிசங்கர்

(ஒஸ்லோ)

நக்சலைட்டுகளும் நல்ல இதயம் கொண்டவர்கள்தான். இலட்சியங்கள் மாற்றப்பட்டால் அவர்களும் நாட்டுக்கு ஆதரவாக இருப்பார்கள் என ஆன்மீக குரு ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் கூறினார்.



தெற்காசிய அமைதி மாநாட்டை நோர்வே தல்லைநகர் ஒஸ்லோவில் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் தலைமையிலான வாழும் கலை அமைப்பு அண்மையில் நடத்தியது.

இதில் கலந்து கொண்ட அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில்,

நக்சலைட்டுகளின் பெருக்கம் இந்தியாவின் உள்நாட்டுப் பாதுகாப்புக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக இருக்கிறது. மக்களின் சில பிரிவினரின் வளர்ச்சியில் அரசு அக்கறை காட்டாததால்தான் இந்த பிரச்சினை உருவானது. நக்சலைட்டுகளைக் கட்டுப்படுத்துவதில் ஆன்மீகம் மிகப் பெரும் பங்காற்ற முடியும்.

நக்சலைட் இயக்கங்களில் இருக்கும் இளைஞர்கள் கெட்டவர்களல்ல. உண்மையைக் கூறினால் தாங்கள் கொண்ட கொள்கைக்காகவும் இலட்சியங்களுக்காகவும் வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணிக்கும் அளவுக்கு உறுதியானவர்களாகவும் நல்ல இதயம் படைத்தவர்களாகவும் இருக்கிறார்கள்.

வளர்ச்சிக்கு வன்முறை உகந்தது அல்ல என்பதை அவர்களைப் புரிந்துகொள்ளச் செய்தோமானால் நாட்டுக்கு ஆதரவாக அவர்கள் இருப்பார்கள். அவர்கள் கோரும் சமத்துவம் நீதி போன்றவற்றைப் பெறுவதற்கு வன்முறையற்ற வழியைத் தேர்ந்தெடுப்பார்கள்.

உண்மையிலேயே வறுமையில் வாடு பவர்கள் துப்பாக்கிகளை ஏந்த மாட்டார்கள். நல்ல கல்வி பெறாதவர்களும் ஆன்மீக அறிவு இல்லாதவர்களுமே 'நக்சல்' பாதையைத் தேர்ந்தெடுக்கிறார்கள். நல்ல கல்வியைப் பெறும் குழந்தை அஹிம்சையில் அசைக்க முடியாத நம்பிக்கையைக் கொண்டிருக்கும். அதனால் கல்வியில் அஹிம்சையையும் ஆன்மீகத்தையும் சேர்ப்பது அவசியம். மக்களின் மனதையும் இதயத்தையும் இணைக்கும் பாலமாக ஆன்மீகத்தால் மட்டுமே செயல்பட முடியும்.

மதத்தின் பெயரால் மக்கள் பிரிந்து கிடந்தாலும் ஆன்மீக நிலை அவர்களைச் சேர்த்து வைக்கிறது என்றார் ரவிசங்கர். உலகில் வன்முறை பெருகி வருவதற்கு என்ன காரணம் என செய்தியாளர் கேட்டதற்கு மக்கள் நம்பிக்கை இழப்பதுதான் காரணம் என்றார் அவர்.

அமைதி மாநாட்டை நடத்துவதற்கு நோர்வே நாட்டைத் தேர்ந்தெடுத்ததற்கான காரணம் என்ன என்று அவரிடம் கேட்டபோது, இங்கு எல்லாமே குளிர்ச்சியாக இருக்கிறது. அதனால் அனைவரும் குளிர்ந்த மனநிலையில் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றிச் சிந்திக்க முடியும் என்றார் ரவிசங்கர். (அ-5)

# அண்டார்டிகா செல்லும் கப்பல்களைக் கட்டுப்படுத்துமாறு பிரிட்டன் கோரிக்கை

கடந்த ஆண்டு அண்டார்டிகாவுக்கு சென்ற 'எக்ஸ்புளோரர்' கப்பல் விபத்துக்குள்ளாகி மூழ்கி விட்டது. இதை ஒரு எச்சரிக்கையாக கொள்ளவேண்டும் என்பது நிபுணர்களின் கருத்து. சாதாரண டீசலில் இயக்கப்படும் கப்பல்கள் விபத்துக்குள்ளாகி டீசல் கசிவு ஏற்பட்டால் அதை எளிதில் அகற்ற முடியாது. அண்டார்டிகா பகுதி சுற்றுச்சூழலுக்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தும்.

## உலக தரிசனம்

எனவே அண்டார்டிகா செல்லும் கப்பல்களை கட்டுப்படுத்தவேண்டும் என சர்வதேச கடல் போக்குவரத்து அமைப்பிடம் பிரிட்டன் நிபுணர்கள் குழு கோரிக்கை விடுத்துள்ளது. (அ-5)

# நேபாளத்தில் மாவோயிஸ்ட்டுகள் வெற்றி மன்னராட்சி முடிவுக்கு வருகிறது?

(காத்மாண்டு)

நேபாள நாட்டில் அரசியல் நிர்ணய சபைக்கு நடந்த தேர்தலில் மாவோயிஸ்ட் டுகள் வெற்றி பெற்றனர். மன்னராட்சிக்கு முடிவு கட்டவேண்டும் என்ற கோரிக்கையுடன் தேர்தல் களத்தில் இறங்கிய அவர்கள் வெற்றி பெற்றதை தொடர்ந்து புதிய அரசியல் சட்டத்தில் மன்னராட்சிக்கு அவர்கள் முடிவு கட்டுவார்கள் என்று தெரிகிறது.

**240 ஆண்டு கால மன்னராட்சி**

நேபாள நாட்டில் கடந்த 240 ஆண்டுகளாக மன்னராட்சி நடந்து வருகிறது. மன்னராட்சியை ஒழித்து விட்டு மக்களாட்சியை கொண்டுவர வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் மாவேயிஸ்ட்டுகள் ஆயுதம் தங்கி போராடி வந்தனர்.

அவர்கள் போராட்டத்தை ஒடுக்க மன்னர் எடுத்த நடவடிக்கைகள் மக்களை கோபப்படுத்தும் வகையில் அமைந்து விட்டது. இதனால் எழுந்த புரட்சி, மன்னருக்கு எதிராக அமைந்தது. மன்னர் ஆட்சிக்கு முடிவு கட்டும் வகையில் புதிய அரசியல் சட்டத்தை உருவாக்குவதற்காக அரசியல் நிர்ணய சபையை அமைப்பதற்கு தேர்தல் நடந்தது. ஓட்டுக்கள் எண்ணும் பணி நடந்து வருகிறது.

மொத்தம் உள்ள 240 தொகுதிகளில் இது வரை 105 தொகுதிகளுக்கான முடிவுகள் அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளன. முடிவுகள் அறிவிக்கப்பட்ட 105 தொகுதிகளில் மாவோயிஸ்ட்டுகள் 61 இடங்களில் வெற்றி பெற்றனர். நேபாள கம்யூனிஸ்டு கட்சி 15 இடங்களிலும் பிரதமர் கொய்ராலாவின் நேபாள காங்கிரஸ் கட்சி 17 தொகுதிகளிலும் மாதேசி மக்கள் கட்சி 7 இடங்களிலும் உழவர் உழைப்பாளர் கட்சி 2 இடங்களிலும் வெற்றி பெற் றன. மற்ற கட்சிகள் தலா ஒரு இடத்தில் வெற்றிபெற்றன.

இந்த தேர்தலில் மாவோயிஸ்ட்டுகள் வெற்றி பெற்றதை தொடர்ந்து அவர்கள் புதிய அரசியல் சட்டத்தில் மன்னராட்சியை ஒழிக்க வகை செய்யவார்கள் என்பது உறுதியாகியுள்ளது.

**மன்னரின் புத்தாண்டு வாழ்த்து**

இந்த நிலையில் நேபாள நாட்டில் புத்தாண்டு தினத்தையொட்டி மன்னர் ஞானேந்திரா வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் நடந்து முடிந்த தேர்தலில் மக்கள் உற்சாகத்துடன் கலந்துகொண்டது திருப்தி அளிப்பதாகவும் நாட்டின் ஒற்றுமையை பாதுகாப்பதில் மக்கள் உறுதியாக இருக்கவேண்டும் என் றும் அவர் கேட்டுக்கொண்டார். புத்தாண்டு வாழ்த்து செய்தியில் தேர்தல் பற்றி மன்னர் குறிப்பிட்டு. திருப்தியளிப்பதாக கூறியிருந்தது நேபாள மக்களுக்கு ஆச்சரியத்தை அளித்துள்ளது. (அ-5)

# ஒரே நேரத்தில் 1300 இராணுவத்தினர் பதவி நீக்கம், தீவிரவாதிகளுக்கு ஆதரவாம்

ஈராக்கில் புதிய அரசு ஏற்படுத்தப்பட்ட பிறகு சதாம் உசேன் இராணுவம் கலைக்கப்பட்டு புதிய இராணுவ படை, பொலீஸ் படை உருவாக்கப்பட்டது.

சதாம் உசேன் இராணுவத்தில் இருந்தவர்களும் இந்த படையில் இடம் பெற்று இருந்தனர். அவர்கள் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து படைகளுடன் சேர்ந்து தீவிரவாதிகளுடன் சண்டை போட்டுவருகின்றனர்.

ஆனால் அமெரிக்க படையுடன் சேர்ந்து போரரிடுவதற்கு இராணுவத்தில் சிலர் தயக்கம் காட்டி வருகின்றனர். அவர்கள் தீவிர வாதிகளுக்கு ஆதரவாக செயற்படுகின்றனர். சமீபத்தில் பஸ்ரா நகரில் தீவிரவாதிகள் ஏராளமானோர் புகுந்து தாக்குதல் நடத்தினார்கள். அப்போது ஈராக் இராணுவத்தின் ஒரு பகுதியினர் தீவிரவாதிகளை எதிர்த்து போரிட மறத்து விட்டனர். சிலர் படையில் இருந்தே ஓடி விட்டனர்.

இவர்கள் யார்-யார்? என கண்டறிந்து 1300 இராணுவ வீரர்கள், மற்றும் பொலிசா ரை ஈராக் அரசு ஒரே நேரத்தில் பதவி நீக்கம் செய்துள்ளது. (அ-5)

# சர்வதாரி வருடம் உங்களுக்கு எப்படி?




சர்வதாரி ஆண்டு, உங்கள் ராசியில் அஷ்டம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் ராகு பகவான் உங்களின் முயற்சிகளில் தடை ஏற்பட்ட பிறகே வெற்றி பெற வைப்பார். உங்களுக்கு நண்பர்களாக இருந்தவர்கள் உங்களை விட்டு விலகி நிற்பார்கள். எனவே உங்கள் செயல்களை நன்கு சிந்தித்த பிறகே செயல்படுத்தவும். சேமிப்புக்களிலும் கையிருப்புப் பொருட்களிலும் கவனம் செலுத்து வீர்கள் என்றாலும் புதிய முதலீடு களில் ஈடுபட வேண்டாம்.

அதேசமயம் உங்கள் குடும்ப ஸ்தானத்தில் அமர்ந்திருக்கும் கேது பகவான் உங்களை கல்வி கேள்விகளில் சிறக்க வைப்பார். குடும்பத்தில் உற்றார். உறவினர்களுடன் இணக்கமான சூழ்நிலை உருவாகும். உங்களின் நூதன அணுகு முறையை அனைவரும் பாராட்டுவார்கள். முகத்தில் வசீகரம் கூடும். வருமானம் வருவதுடன் புதிய பொறுப்புகளும் வந்து சேரும். உற்றார், உறவினர்களின் பிரச்சினைகளை உங்களின் வாக்கு சாதுர் யத்தால் தீர்ப்பீர்கள். இந்த ஆண்டு இறுதிக்குப் பிறகு பிரச்சினைகளிலிருந்தும் பெருமளவுக்கு விடுபட்டுவிடுவீர்கள். உங்களின் கவலைகளை உங்களுக்குள்ளேயே வைத்துக்கொள்ளும் பக்குவமும் உண்டாகி விடும்.

தைரிய ஸ்தானத்தில் பலமாக அமர்ந்துள்ள சனி பகவான் உங்களுக்கு நிலையான புகழ் மற்றும் பெருமையை உண்டாக்கித் தருவார். உங்களின் செயலாற்றல் இரட்டிப்பாகும். இளைய சகோதர சகோதரிகளின் மூலம் நலன்களைப் பெறுவீர்கள். உங்களின் மனோபலம் பெருகும். கலைகளில் ஈடுபடும் ஆர்வம் ஏற்பட்டு அதில் வெற்றியும் பெறுவீர்கள். கல்வியில் இருந்த இடையூறுகள் நீங்கும். உங்களுக்கு வரவேண்டிய கடன்கள் திரும்பி வரும். வழக்குகளிலும் சாதகமான தீர்ப்பு கிடைக்கும்.

உத்தியோகஸ்தர்கள் அலுவலகப் பணிகளில் உற்சாகத்துடன் ஈடுபடுவீர்கள். எடுத்த காரியங்களை சரியான நேரத்தில் முடித்து மேலதிகாரிகளின் அன்பையும் ஆதரவையும் பெறுவீர்கள். உங்களுக்கு சற்று தொல்லைகள் கொடுத்து வந்த சக ஊழியர்கள் பகைமை மறந்து நட்புடன் பழகுவர். அலுவலகம் சம்பந்தமான பயணங்களால் நன்மைகளைக் காண்பீர்கள். உழைப்பிற்குத் தகுந்த ஊதியமும் கிடைக்கும்.

இந்த ராசி வியாபாரிகள் புதிய முயற் சிகளில் வெற்றி பெற்றாலும் கொடுக்கல் வாங்கலில் சமநிலையே நிலவும். அதனால் கடன்களை உடனடியாக வசூலிக்க முயற்சி மேற்கொள்ளவும். வியாபார யுக்திகளைச் செயல்படுத்தும் போது ஏற்படும் இடையூறுகளை பொறுமையுடனும் பொறுப்புடனும் சமாளிக்கவும் நண்பர்களிடம் விட்டுக்கொடுத்து நடந்து கொள்ளவும்.

விவசாயிகள் நல்ல விளைச்சலைக் காண்பார்கள் புதிய குத்தகைகளை நீங்கள் நாடிச் சென்று எடுக்கலாம் மாற்றுப் பயிர்களையும் பயிரிட்டு லாபத்தைப் பெருக்குவீர்கள் அதே நேரம் கால்நடைகளால் பலன்கள் கிடைக்குமென்றாலும் அவற்றுக்காக கொஞ்சம் செலவு செய்யவும் நேரிடும்.

அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை கட்சி மேலிடத்தின் ஆதரவைப் பெறுவீர்கள். அதே சமயம் தொண்டர்கள் சற்று பாராமுகமாக நடந்து கொள்வார். அதற்காகக் கோபப்படாமல் விவேகத்துடன் விட்டுக்கொடுத்து நடந்து கொண்டு அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் மற்றப்படி சமுதாயத்திற்குப் பயன்படும் உண்மையான தொண்டுகளில் ஈடுபடுவீர்கள். எதிரிகளின் இரகசியத் திட்டங்களை அம்பலப்படுத்துவீர்கள். இதனால் உங்கள் புகழ் கூடும்.

கலைத்துறையினரின் மதிப்பும் மரியாதையும் பன்மடங்கு அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்கள் அதிக வருமானத்தைப் பெற்றுத் தரும். சக கலைஞர்கள் மற்றும் ரசிகர்களும் உங்களுக்கு உதவிகரமாக இருப்பார்கள். அதே சமயம் பேசும் நேரத்தில் அனாவசிய வார்த்தைகள் வேண்டாம். மற்றவர்களின் மறைமுகமான குத்தல் பேச்சுக்களைப் பொருட்படுத்தாதீர்கள்.

பெண்மணிகள் கணவரிடம் ஒற்றுமையோடு பழகுவர். குடும்பத்தில் சந்தோஷம் நிலைத்திருக்கும் உடல் ஆரோக்கியம் மேம்படும். அதேசமயம் அனைவரிடம் சமமாக நடந்து கொள்ளவும். எவரையும் எடுத் தெறிந்து பேச வேண்டாம். மற்றபடி குடும்ப விசேஷங்களின் போது விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களை வாங்கி அணிந்து கொள்வீர்கள்.

மாணவமணிகள் நன்றாக உழைத்துப் படித்து நல்ல மதிப்பெண்களைப் பெறுவார் கள் அனைத்து விளையாட்டுகளிலும் ஈடு படுவார்கள் கல்வி ரீதியான சுற்றுலாப் பயணங்களை மேற்கொள்வார்கள். நினைவாற்றல் கூடும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் பாராட்டும் வகையில் நடந்து கொள்வீர்கள். (தொடரும்)

## இந்துநாகரிக கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிக கருத்தரங்குத்தொடர் இரண்டில் 'இலக்கியமும் இந்துப்பண்பாடும்' என்ற தலைப்பில், நாளை புதன்கிழமை பி.ப 1 மணிக்கு. பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் பேராசிரியர் திருமதி கலைவாணி இராமநாதன் தலைமையில் நடைபெற வுள்ளது.

நிகழ்வில் இந்து நாகரிகத்துறை தலைவர் கலாநிதி மா.வேதநாதன் தொடக்க உரையையும் இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி சுகந்தினி சிறி முரளிதரன் 'ஆகமங்களில் கட்டடக்கலை' எனும் பொருளில் கருத்துரையும் வழங்கவுள்ளனர். ஓ

## 'புவியியலாளன்' வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் புவியியற்துறை, புவியியற்கழகத்தினால் வெளியிடப்படும் 'யாழ்ப்பாணப் புவியியலாளன் இதழ் 18 -19' விரிவடைந்து வரும் புவியியற் கல்வியின் பரப்பெல்லைகளை கருத்தில் கொண்டு முதல் முறையாக இம்முறை புவியியல் தொடர்பான கட்டுரைகளுடன் சமுதாய, பிராந்திய திட்டமிடல் தொடர்பான கட்டுரைகளையும் உள்ளடக்கி வெளிவருகின்றது.

இவ்வெளியீட்டுவிழா நாளை புதன் கிழமை பி.ப.1மணியளவில் யாழ்.பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில், புவியியற் கழகத் தலைவர் சி. திருச்செந்தூரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

விழாவில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கம், கௌரவ விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ் நாள் பேராசிரியருமான பொ. பாலசுந்தரம்பிள்ளை, சிறப்பு விருந்தினர்களாக யாழ் .பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா மற்றும் புவியியற்றுறை தலைவர் பேராசிரியர் கா. குகபாலன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நிகழ்வில் வெளியீட்டுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் வழங்குவார். முதல் பிரதி யினை யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் வழங்க, யாழ்ப்பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட பீடாதிபதி க.தேவராஜா பெற்றுக் கொள்வார். ஓ

# மடுமாதாவின் திருச்சொரூபம் விரைவில் தேவாலயம் எடுத்துவரப்படும்

## ஆயர் மாநாட்டில் தகவல்

விடுதலைப்புலிகளின் கோரிக்கைக்கு அமையவே மடுமாதாவின் திருச்சொரூபம் தேவாலயத்திலிருந்து வெளியேற்றப்பட்டதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை கத்தோலிக்க ஆயர்கள் மாநாட்டில் மறுத்துரைக்கப்பட்டுள்ளது. மிகவிரைவில் மடுமாதா வின் திருச்சொரூபம் தேவாலயத்துக்கு எடுத் துவரப்படுமென உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

மடுமாதாவின் திருச்சொரூபம் தற்காலிகமாக தேவன்பிட்டியிலுள்ள புனித சில்வஸ்டர் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தில் விடுவிக்கப்படாத பகுதிகளிலுள்ள மக்கள் அனைவரும் பாதுகாப்புக் காரணங்களுக்காக இடம்பெயர்ந்திருப்பதாக இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் சங்கத்தின் தலைவர் விஜானி பெர்னான்டோ மற்றும் செயலாளர் நாயகம் நோபேர்ட் அன்டராடி ஆகியோர் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதேச மக்கள் மன்னார் மாவட்ட ஆயர் இராஜப்பு யோசப் ஆகியோரின் அனுமதியுடன் மடு மாதாவின் திருச்சொரூபத்தை மீண்டும் மடு தேவாலயத்தில் வைக்கப்படும் என கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆயர்கள் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக மன்னார் பகுதிகளில் இடம்பெற்று வரும் கடுமையான ஷெல்தாக்குதல்களால் அப் பகுதிகளின் நிலைமை மிகவும் மோசமாக காணப்படுகிறது. தேவாலயங்கள், குருமார்களின் இல்லங்கள் என்பவற்றின் மீதும் ஷெல்கள் வீழ்ந்துள்ளன. விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையிலான மோதல்களால் மடுதேவாலயத்திற்கு அருகில் உள்ள கோயில் சேத மடைந்துள்ளது. இருதய நாதர் தேவாலயத்தின் கூரைகள் மிகவும் மோசமாக சேத மடைந் திருப்பதாக மன்னார் ஆயரின் செய லாளர் சுரேஷ் அடிகளார் கூறியுள்ளார்.

இதேவேளை, மடுதேவால யப் பகுதியிலிருக்கும் மக்களுக்கு உதவுவ தற்கு தாம் தயாராக இருக்கின்ற போதும் இது வரை எவரும் உதவி கோரவில்லை என பாதுகாப்பு அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)



வலிமேற்கு பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் வட்டுக்கோட்டை இந்துவாலிபர் சங்க விளையாட்டுக்கழகம் சம்பியனாகத்தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் வட்டுக்கோட்டை இந்துவாலிபர் விளையாட்டுக்கழகமும் சங்கானை இந்து வாலிபர் சங்கமும் மோதிக் கொண்டன.

போட்டியின் நிறைவில் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க விளையாட்டுக்கழகம் 19 :12 புள்ளிகள் என்ற அடிப்படையில் சங்கானை இந்துவாலிபர் சங்க விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டு வலி மேற்கு பிரதேச செயலக சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.(அ-5)

# தொழில் நுட்பக்கல்லூரிகளில் நடாத்தப்படும் கற்கை நெறிகளுக்கு மாணவர்களை அனுமதித்தல்

(கொழும்பு)

தொழில்நுட்பக் கல்லூரிகளில் நடாத்தப்படும் கற்கை நெறிகள் தொடர்பாக தகைமையுடைய விண்ணப் பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணபங்கள் உரிய படிவத்தில் தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திலும் ரூபா 10 முத்திரைஒட்டி விண்ணப்பதாரர் ஒப்பமிட்டு 16.05.2008 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடிய வகையில் உரிய தொழில் நுட்பக் கல்லூரியின் அதிபருக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை 11.04.2008 ஆம் திகதிய வர்த்தமானியிலோ அன்றி வலம்புரிக் காரியாலயத்தில் நேரிலோ பார்வையிடலாம். ஓ

# இலங்கைத் தமிழர் நிலை குறித்து மத்திய மாநில அரசுகளின் செயற்பாட்டுக்கு கண்டனம்

## விஜயகாந்தின் கட்சி தீர்மானம்



(சென்னை)

இலங்கை அரசுடன் இந்திய அரசுசெய்து கொண்ட ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டு கச்சதீவை மீட்க வேண்டும் என்று தே.மு.தி.க. செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தே.மு.தி.க மாநில செயற்குழு கூட்டம் சென்னை கோயம்பேட்டில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கட்சியின் தலைவர் விஜயகாந் தலைமை தாங்கிப் பேசினார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்க்ள விவரம் வருமாறு,

மீனவர்கள் கடலில் மீன்பிடிக்க சென்றால் இலங்கை கடற் படை அவர்களைப் பிடித்து செல்கிறது. குறிப்பாக ராமேஸ்வரம் மீனவர்கள் தங்கள் வாழ்வுரிமையை இழந்துள்ளனர். கச்சதீவு பகுதியில் இந்திய அரசு இலங்கை அரசுடன் ஒப்பந்தம் செய்துள்ளது. தமிழ் மக்களின் வாழ்வுரிமைக்கு இது எதிராக செயல்படுவதால் இந்திய அரசு இலங்கையுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும்.

### தமிழர்களின் பரிதாப நிலை

இலங்கையில் வாழும் தமிழர்கள் பல ஆண்டுகளாக சமவாய்ப்பும் சம உரிமையும் மறுக்கப்பட்டு செய்வதறியாது திகைத்து வருகின்றனர். இலங்கை அரசு விமானப் படை கொண்டு தமிழ் மக்களை தாக்கிவருகின்றனர். இதனால் உயிர்களையும் உடமைகளையும் இழந்து தமிழர்கள் அல்லற்படுகின்றனர். தமிழர்களின் பரிதாப நிலையை மத்திய மாநில அரசுகள் கண்டுகொள் ளாததை செயற்குழு கண்டிக்கிறது.

மேற்கண்ட தீர்மானங்கள் உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (அ-5)

# பசியில்லாத குழந்தை



எனது இளைய மகனுக்கு வயது இரண்டு. அவனுக்கு பசியே எடுப்பதில்லை. எந்தச் சாப்பாட்டைக் கொடுத்தாலும் விருப்பமாகச் சாப்பிடுகிறான் இல்லை. சாப்பாட்டுடன் விளையாடிக் கொண்டிருப்பான். கண்டித்து சாப்பாடுகளை ஊட்டினாலும் மறுக்கின்றான். சிலவேளைகளில் சத்தியும் எடுப்பான். நடை, பேச்சு, விளையாட்டு எதிலும் குறைவில்லை. தன்னோடு ஒத்த பிள்ளைகளோடு ஒப்பிடும் போது இவன் எல்லாவற்றிலும் முன்னிற்குத் தான் நிற்பான். சாப்பாடு ஒன்றைத் தவிர. பல வித டொனிக் மருந்துகள் கொடுத்துப் பார்த்தேன். அவற்றினால் பசியெடுத்ததாகவும் தெரியவில்லை. உடம்பு கூடியதாக வும் தெரியவில்லை. இவனுக்கு நல்ல பசியெடுக்க ஆலோசனை கூறுங்கள்.

பதில்: வளர்ச்சி பதிவேட்டைப் பாருங்கள்

உங்கள் மகனுக்கு பசிஎடுப்பதில்லை என்று கூறுகிறீர்கள். ஆனால், உடல், மனவளர்ச்சிகளில் மற்ற பிள்ளைகளுக்கு குறைந்தவனில்லை என்ற தொனியில் எழுதியிருந்தீர்கள். தடுப்பூசிகள் போடும்போது அதனைக் குறித்து தரும் குழந்தை வளர்ச்சி பதிவேடு உங்களிடம் இருக்கிறதல்லவா? அதில் உங்களது மகனின் இப்போதைய வயதிற்கு நேரே தற்போதைய நிறையை குறித்துப் பார்த்தால் அவனது வளர்ச்சி போதுமானதா இல்லையா என்பதை அறிந்துகொள்ளமுடியும். இதை அட்டவணையில் குறித்துப் பார்ப்பதில் உங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தால், உங்களது குடும்ப வைத்தியரது அல்லது உங்களது பகுதி சுகாதார சேவையாளரது உதவியைப் பெறுங்கள்.

சிலவேளைகளில், அவனது வயதுக் குழந்தைகளோடு ஒப்பிடும்போது அவன் பார்வைக்கு சிறியவனாகத் தோன்றலாம்.

இதற்குக் காரணங்கள் பலவாய் இருக்கலாம். உதாரணமாக நீங்கள் அல்லது உங்கள் கணவர் உருவத்தில் சிறியவர்களாக இருந்தால் அது உங்கள் குழந்தையிலும் எதிரொலிக்கும். எதற்கும் அவனது பிறப்பு நிறைக்கேற்ப அவன் வளர்ச்சி இருந்தால் கவலைப்படவேண்டியதில்லை.

**உடற்தேவைக்கேற்ப உண்பார்கள்**

இரண்டுவயதுப்பிள்ளைகள் உணவைப் பற்றி அக்கறை எடுப்பதில்லை. விளையாடி விளையாடித்தான் சாப்பிடுவார்கள். உணவும் அவர்களுக்கு விளையாட்டுப் பொருள் போலத்தான் தெரியும். விரைவாகவும் உண்ண மாட்டார்கள். நீண்டநேரம் எடுக்கக் கூடும். உணவில் ஆர்வம் காட்டாமலும் இருக்கக் கூடும். ஆனால் தமது உடற்தொழிழ்பாட்டிற்கும் வளர்ச்சிக்கும் வேண்டியதை நிச்சயம் உண்பார்கள். வீணாகக் கவலைப்படாதீர்கள்.




**நிர்ப்பந்திக்கவேண்டாம்**

சில பிள்ளைகளுக்கு இயற்கையிலேயே கூடிய பசி இருப்பதுண்டு. அதேபோல சில பிள்ளைகளுக்கு இயற்கையிலேயே பசி குறைவாக இருக்கலாம். எனவே நீங்கள் அந்தரப்படுவதில் எந்தவிதப் பிரயோசனமும் இல்லை. ஆனால் முக்கியமான விடயம் என்னவெனில் சாப்பிடும்படி அவனை நிர்ப்பந்திப்பதும், அதீதமாக முயற்சிப்பதும் தான் அவன் சாப்பிடாமல் இருப்பதற்குக் காரணமாக இருக்கக் கூடும்.

நீங்கள் எந்தளவிற்கு அதிகம் முயற்சிக்கின்றீர்களோ, அவன் அதற்கும் மேல் வேண்டாம் என அடம்பிடிக்கலாம். உணவு ஊட்டுவதற்காக நீங்கள் எடுக்கும் அக்கறையும், ஆர்வமும் அவனுக்கு விளையாட்டுப் போலத் தோன்றி அவனுக்குச் சந்தோஷத் தைக் கொடுக்கும். முழு வீடுமே தனக்குப் பின்னால் திரண்டு நின்று தனக்கு உணவூட்ட முயல்வது அவனுக்கு மிகுந்த ஆனந்தத்தை யும், திருப்தியையும் கொடுக்கும். அத்தகைய கவனிப்பைப் பெறுவதற்காகவே அவன் உணவை மறுப்பான்.

**டொனிக்குகள் உதவுமா?**

உங்களைப் போலவே பல தாய்மார்கள் தாங்கள் உணவூட்டுவதற்காக எல்லாவிதமான முயற்சியையும் எடுத்துப் பார்த்தும் சரிவரவில்லை என்பார்கள். ஆசைகாட்டுவது, கதை சொல்வது, சாப்பிட்டால் அவனுக்கு விருப்பமான தின்பண்டங்களைக் கொடுப்பது, கண்டிப்பது, தண்டிப்பது என எல்லா முயற்சிகளை எடுத்தாலும் அவன் சாப்பிடாமல் இருக்கக் கூடும். அதேபோல விற்றமின்களும் டொனிக்குகளும் கூட குழந்தையை சாப்பிட வைக்காது.

**உங்கள் முயற்சி**

நீங்கள் எடுக்கும் ஒரே ஒரு நடவடிக்கை அவனைச் சாப்பிட வைக்கக்கூடும்.

எந்தவித முயற்சி யும் எடுக்காமல் பேசாமல் விடுவது தான் அது. உணவை அவனுக்குக் கொடுத்து விட்டு, பசியெடுத்தால் உண், இல்லாவிட்டால் விடு என்ற பாவனையில் விட்டுப் பாருங்கள். சாப்பிட்டுவிட்டானா, இல்லையா என அவனது உணவுக் கோப்பையை பார்க்கும் துருவல் பார்வை கூட கூடாது. உணவை உண்ணாத தற்காக அவனை ஏசவோ, தண்டிக்கவோ வேண் டாம். உண்டு முடித் ததற்காக பாராட் டவும் வேண்டாம். அவன் தானே வழிக்கு வருவான்.

**உணவின் அளவும் கவர்ச்சியும்**

ஒரேயடியாக கோப்பையில் நிறைய உண வைப் போட்டு விடாதீர்கள். அளவாகப் போடுங் கள். தேவையென்றால் அவனாகக் கேட்கட் டும். முதல் நாளே அவன் சரியாக சாப்பிடுவா னென எண்ணாதீர்கள் மனதைத் திடப்படுத்திக் கொண்டு இந்தமுறையைக் கடைப் பிடியுங்கள். சில தினங்களுக்குள் தானாகவே சாப்பிட ஆரம்பிப்பான்.

அவனது கண்களுக்கு கவர்ச்சியாக உணவு களைக் கொடுங்கள். பல்வேறு நிறங்களில் அழகாக ஒழுங்குபடுத்திக்கொடுங்கள். அத்து டன் அவன் விரும்பி உண்பவற்றைக் கொடுங்கள். ஆனால் அதற்காக அவனை ருசிகளுக்கு அடிமையாக விட்டுவிடாதீர்கள். நீங்கள் கொடுப்பதை அவன் வேண்டாமென்று சொன்னால் எந்தவித மறுப்பும் கூறாமல் உணவுக்கோப்பையினை எடுத்து விடுங் கள். பசித்தால் மீண்டும் கொடுங்கள்.

டாக்டர் எம்.கே.முருகானந்தன்


**நொறுக்குத்தீனி**

அவனது சாப்பாட்டுமுறைகள் பற்றியும், அவன் அதிகம் சாப்பிடாதது பற்றியும் அவன் காது பட மற்றவர்களிடம் விவாதிக்காதீர்கள். முக்கியமான விடயம் என்னவெனில் சாப்பாடுகளுக்கு இடைப்பட்டநேரத்தில் சிற்றுண்டிகளையும், நொறுக்குத்தீனிகளையும் கொடுக்காதீர்கள்.

போதிய உணவை எடுக்கட்டும் என்ற ஆர்வத்தில் ஒரு நாளைக்கு 15முதல் 20 தடவைகள் கூட சிலதாய்மார் தமது குழந்தைகளுக்கு கொடுக்க முயல்வதுண்டு.

நீங்களும் இத்தகைய தவறான முறைகளுக்குப் போக வேண்டாம். அத்துடன் பிள்ளையை எந்த நேரமும் தூக்கி வைத்து செல்லம் கொடுக்காதீர்கள். நன்றாக ஓடி விளையாட விடுங்கள். பசி எடுக்கும். உணவை உண்ணும்படி ஊக்கப் படுத்தாமையாலும், தெண்டிக்காமல் விடுவதாலும் எந்தப் பிள்ளையும் பட்டினிக்கு ஆளா வதில் லை என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்திருங்கள்.

# திரவ உணவு திகட்டாத மருந்து!



உடல் பருமனால் ஓடவும் முடியாமல், ஆடவும் முடியாமல் துன்பப்படுபவர்கள் பலர் காலையில் எழுந்து ஓடுவது, சாப்பிடாமல் பட்டினி கிடப்பது என பல வழிமுறைகளை பயன்படுத்தி உடல் எடையைக் குறைக்க முயற்சி செய்வார்கள். ஆனால் திரவ உணவு வகைகளை உட்கொண்டால், உடல் எடை 'சரசர' வென குறையும் என்பது கண்டறியப்பட்டுள்ளது. திரவஉணவுகளில் கொழுப்பு குறைவாக இருக்கும் என்பதால், உடல் எடையைக் குறைப்பிற்கு உதவுகிறது.

நமது முன்னோர்கள் நீராகாரம், கஞ்சி, கூழ், பருத்திப் பால் குடித்து ஆரோக்கியமாக உடல் அமைப்புடன் வாழ்ந்ததற்கு இதுதான் காரணமாக இருந்திருக்குமோ!

# கரப்பான் பூச்சியால் அலர்ஜி

கரப்பான் பூச்சிகள் இல்லாத வீடுகள் இருக்கமுடியாது. மனிதர்கள் இல்லாத வீடுகளில் கூட கரப்பான் பூச்சிகள் வாழ்ந்து கொண்டு இருக்கும்.

கரப்பான் பூச்சியால் மனிதர்களுக்கு அலர்ஜி ஏற்படுகிறது. கரப்பான் பூச்சி வாழும் இடங்களில், அதன் எச்சங்கள் சேர்ந்திருக்கும்.

கரப்பான் பூச்சியின் எச்சங்கள் மனிதர்களின் உடலில் படும்போது அந்த இடத்தில் அரிப்பு, தோல் சிவந்து போதல் போன்ற விளைவுகள் ஏற்படும். கரப்பான் பூச்சி இருக்கும் இடங்களில் புழங்கிய பிறகு கை, கால் களை கழுவி விடுவதால் கரப்பான் பூச்சி அலர்ஜி யில் இருந்து தப்பலாம்.

தோல்களில் இருக்கும் சிறு காயங்களின் மூலம் கூட கரப்பானின் எச்சங்கள் உடலுக்குள் நுழைந்து பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புண்டு.

கரப்பான் பூச்சிகள் இருக் கும் வீடுகளில் வசிப்பவர் கள், அலர்ஜி வராமல் பார்த்துக் கொள்வது சிறப்பு.

# பெண்களின் இதய நோயை தவிர்க்கும் உடற்பயிற்சி

தொடர்ந்து உடற்பயிற்சி செய்து வரும் பெண்களுக்கு இதய நோய் வரும் வாய்ப்புகள் குறைவு. பொதுவாக 40 வயதிற்கு மேல், பெரும்பாலான பெண்களுக்கு மாதவிலக்கு நின்று விடும். மாதவிலக்கு நின்ற பிறகு, அதிகமான மன அழுத்தத் திற்கு உள்ளாகும் பெண்களுக்கு இதய நோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

எனவே மாதவிலக்கு நின்றவுடன், உடல் ஆரோக்கியத்தை காக்க பெண்கள் தொடர்ந்து உடற்பயிற்சியில் ஈடுபட வேண்டியது அவசியம்.

உடற்பயிற்சியில் ஈடுபடுவதால் பெண்களுக்கு மன அழுத்தம் ஏற்படாது. மன அழுத்தம் உண்டாக்கும் சூழலிலும், பெண்கள் சிறப்பாக செயல்படுவதற்கு உடற்பயிற்சி மிகவும் உதவியாக இருக்கும். எனவே மாதவிலக்கு நின்ற பிறகு பெண்கள் தொடர்ந்து உடற்பயிற்சி செய்தால் நீண்டகாலம் வாழலாம்.

# அளவுக்கு மிஞ்சினால் அப்பிளாலும் ஆபத்து

'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' என்பது பழமொழி. அமிர்தத்தை தேவைக்கு அதிகமாகச் சாப்பிட்டால் ஆபத்து என்பதுபோல, பழங்களையும் அளவுக்கு அதிகமாக சாப்பிடுவது ஆபத்தானது என கண்டறிந்து உள்ளனர்.

பழங்களில் பிரக் டோஸ் என்னும் வேதிப் பொருள் உள்ளது.

பழங்களின் இனிப்பு சுவைக்கு இந்த வேதிப் பொருளே காரணம். மனிதனுக்கு ஒரு நாளைக்கு 25 கிராம் பிரக் டோஸ் மட்டுமே ஜீரணமாகும்.

அதற்கு மேல் சாப்பிட்டால், வயிற்று சலி, வயிற்றுப்போக்கு, வாயுப்பிரச்சினைகள் போன்றவை ஏற்படும். அளவுக்கு அதிகமாக ஆப்பிள் ஜூஸ் குடிக்கும் குழந்தைகள் இது போன்ற பிரச்சினைகளால் எளிதில் பாதிக்கப் படும் வாய்ப்பு இருப்பதாக தெரியவந்துள்ளது.

வெறும் வயிற்றில் பழங்கள் சாப்பிடுவதையும் தவிர்க்க வேண்டும்.

பழங்கள் அதிகம் சாப்பிடும் போது, காய்கறிகளையும் சாப்பிட்டால் வயிற்றுப் பிரச்சினைகள் வராது தவிர்க்க முடியும். எனவே பழங்கள் அதிகம் சாப்பிடுபவர்கள் குறைத்துக் கொள்ள வேண்டும்.

# சொக்லேட் சாப்பிடலாமா?

சொக்லேட் சாப்பிட்டால் உடல் எடை அதிகரிக்கும் என்று ஒரு பிரிவினரும் சொக்லேட் சாப்பிடுவது ஆரோக்கியத்தின் அடிப்படை என்று ஒருபிரிவினரும் கூறி வருகின்றனர்.

சொக்லேட்டில் மூன்று வகைகள் உண்டு. கருப்பு சொக்லேட், வெள்ளை சொக்லேட், பால்சொக்லேட் என மூன்று வகையான சொக்லேட்டுகள் உள்ளன.

இதில் கருப்பு சொக்லேட்டில் மட்டுமே எதிர் ஒக்சிசனேற்றியான ஒரு வேதிப் பொருள் உள்ளது.

இந்த சொக்லேட்டை சாப்பிடுபவர்களுக்கு இரத்த அழுத்தம் கட்டுப்பாட்டில் இருக்கும், இதயம் தொடர்பான பிரச்சினைகளும் ஏற்படாது.

மற்றவகைசொக்லேலட்டுகளில் அதிகமான அளவுகொழுப்பு கலந்திருக்கும். எனவே அவை உடல் ஆரோக்கியத்திற்கு ஏற்றவை அல்ல. எனவே சொக்லேட் சாப்பிடுபவர்கள் கருப்பு சொக்லேட்டை சாப்பிடுவது ஆரோக்கியத்தைத் தரும்.

# சுவாசப் பிரச்சினையை போக்கும் மீன்

சுவாசம் தொடர்பான பிரச்சினைகள் உடையவர்கள் விட்டமின் 'டி' அதிகமுள்ள உணவுப் பொருள்களை சாப்பிட்டால், அப்பிரச்சினைகள் குறைய வாய்ப்புள்ளது.


சுவாசப்பாதை யில் ஏற்படும் பிரச்சினைகள் நீங்கி, சுவாச உறுப்புகள் சிறப்பாக இயங்க விட்டமின் 'டி' சத்து உதவியாக இருக்கிறது. மாலை வெயி லில் விற்றமின் டி சத்து அதிகம். மீன்களிலும் விற்றமின் 'டி' சத்து அதிகமாக உள்ளது. எனவே ஆரோக்கியமான சுவாசம் வேண்டு வோர் தயங்காமல் மீன் சாப்பிடலாம்.

# மூன்றாவது ஒருநாள் போட்டியில்

# பங்களாதேஷ் அணி போராடித் தோல்வி; தொடரைத் தனதாக்கியது பாகிஸ்தான்

(லாகூர்)

மூன்றாவது ஒருநாள் போட்டியிலும் பங்களாதேஷ் அணி போராடித் தோல்வி அடைந்தது. இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை பாகிஸ்தான் அணி 3:0 என்ற கணக்கில் தனதாக்கியது.


கம்ரான் அக்மால்

பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணி 5 ஒரு நாள் போட்டி, ஒரு இருபது-20 போட்டி கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இத்தொடரில் முதலிரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி தொடரில் 2:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்க, மூன்றாவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் லாகூரில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான சல்மான் பட், கம்ரான் அக்மாலின் அதிரடி சதத்தின் மூலம் 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 308 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சல்மான் பட் 127 பந்துகளில் 132 ஓட்டங்களையும் கம்ரான் அக்மால் 81 பந்துகளில் 100 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மோட்டாஷா, சகீப் அல் ஹசன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 309 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 285 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 25 ஓட்டங்களால் போராடித் தோல்வியடைந்தது.

இதில் சகீப் அல் ஹசன் 75 ஓட்டங்களையும் தமீம் இக்பால் 63 ஓட்டங்களையும் மற்றும் அகமட் 42 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சயீட் அப்ரிடி 2விக்கெட்டுக்களையும் தான்வீர், இத்திக்கார் அன்சும் மற்றும் மலிக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.


சல்மான் பட்

ஆட்டநாயகனாக சல்மான் பட் தெரிவானர். இவ்வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொர்ண்ட தொடரை பாகிஸ்தான் அணி 3:0 என்ற கணக்கில் தனதாக்கியது. (5)

## இந்தியா தொடர்ந்தும் இரண்டாம் இடத்தில்

(துபாய்)

சர்வதேச கிறிக்கெட் சபை (ஐ.சி.சி) டெஸ்ட் அணிகளின் தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது.

கான்பூர் டெஸ்டில் இந்திய அணி தென்னாபிரிக்காவை 8 விக்கெட்டுகளால் வென்று தொடரை சமன் செய்ததால் 2-ஆவது இடத்தை தக்க வைத்துக்கொண்டது.

தொடரை இழந்து இருந்தால் 3-ஆவது இடத்திற்கு பின்தங்கி இருக்கும். இவ்வகையில் அவுஸ்திரேலியா 141 புள்ளிகளை பெற்று தொடர்ந்து முதல் இடத்தில் உள்ளது. இந்தியா 111 புள்ளிகள் பெற்று இரண்டாமிடத்திலும் தென்னாபிரிக்கா 109 புள்ளிகள் பெற்று மூன்றாவது இடத்திலும் உள்ளன.

இங்கிலாந்து 108 புள்ளிகளுடன் 4-வது இடத்திலும், இலங்கை 106 புள்ளிகளுடன் 5-ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 94 புள்ளிகளுடன் 6-ஆவது இடத்திலும், நியூசிலாந்து 91 புள்ளியுடன் 7-வது இடத்திலும் உள்ளன.மேற்கிந்திய தீவுகள் 8-வது இடத்திலும் பங்களாதேஷ் கடைசி இடத்திலும் உள்ளன. (5)


## ஹர்பஜன் சிங் மகிழ்ச்சி

இந்திய -தென்னாபிரிக்க டெஸ்ட் தொடர் சர்ச்சைகள் எதுவும் இல்லாமல் முடிந்திருப்பது மகிழ்ச்சியைத் தருவதாக இந்திய அணியின் சுழற் பந்துவீச்சாளர் ஹர்பஜன் சிங் கூறியுள்ளார்.

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அதிக விக்கெட்டுக்களை கைப்பற்றிய ஹர்பஜன் சிங் தொடர் நாயகனாக தெரிவு செய்யப்பட்டார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் கூறியதாவது,

இத்தொடர் சிறப்பாக நடைபெற்றது. இரு அணிகளுமே சிறப்பாக விளையாடின. சர்ச்சைகள் எதுவுமில்லாமல் போட்டிகள் நடந்து முடிந்தது மகிழ்ச்சியைத் தருகிறது என அவர் கூறினார். (5)

## துடுப்பாட்டத்தில் வீரேந்திர சேவாக்; பந்துவீச்சில் ஹர்பஜன் முன்னிலையில்



(சென்னை)

இந்தியா-தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் நடந்த 3 டெஸ்ட் கொண்ட தொடர் 1:1 என்ற கணக்கில் சமனிலையில் முடிபடைந்தது.

இதில் இந்திய வீரர் வீரேந்திர சேவாக் அதிக ஓட்டம் குவித்து முதலிடம் வகிக்கிறார். அதிக விக்கெட் வீழ்த்திய பந்துவீச்சாளர் பட்டியலில் இந்திய வீரர் ஹர்பஜன் சிங் முதலிடம் பிடித்துள்ளார். அதன் விபரம் வருமாறு;




**துடுப்பாட்டத்தில்**

சேவாக் மூன்று போட்டிகளில் 372 ஓட்டங்கள், மக்கன்சி மூன்று போட்டிகளில் 341 ஓட்டங்கள், அம்லா மூன்று போட்டிகள் 307 ஓட்டங்கள், டி வில்லியர்ஸ் மூன்று போட்டிகளில் 304 ஓட்டங்கள்.

சிமித் மூன்றுபோட்டிகளில் 246 ஓட்டங்க ளையும் எடுத்தனர்.

**பந்துவீச்சில்**

ஹர்பஜன் சிங் மூன்றுபோட்டிகளில் 19 விக்கெட்டுக்கள், ஸ்ரையன் மூன்றுபோட்டி களில் 15 விக்கெட்டுக்கள், நிற்னி மூன்று போட்டிகளில் 10 விக்கெட்டுக்கள்,மோர்கல் மூன்று போட்டிகளில் 8 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியுள்ளனர்.

(5)

## தோனியின் தலைமையில் விளையாட ஆர்வம்-பிளமிங்

(சென்னை)

இந்திய பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) இருபது ஓவர் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 18ஆம் திகதி ஆரம்பமாகிறது.



இதில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வீரர்கள் ஸ்ரீபன் பிளமிங் ஜேக்கப் ஓரம் (நியூசிலாந்து), மைக்கல் ஹஸி (அவுஸ்திரேலியா) ஆகியோர் சென்னையில் முகாமிட்டு சேப்பாக்கம் மைதானத்தில் பயிற்சி செய்து வருகிறார்கள்.

நேற்று முன்தினம் பயிற்சிக்குப் பின் பேட்டியளித்த பிளமிங் கூறுகையில், ஐ.பி. எல் போட்டி சர்வதேச அளவில் இளைஞர் மத் தியில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

தோனி சிறந்த அணித்தலைவர். அவரது தலைமையில் சென்னை அணியில் விளையாட ஆர்வமாக இருக்கிறேன் என்று குறிப்பிட்டார்.

ஹஸி கூறுகையில், வெயில் எங்களுக்கு ஒரு பிரச்சினை கிடையாது. ஏனெனில் போட்டிகள் எல்லாம் இரவில் தான் நடக்கின்றன. இந்தத் தொடரில் போட்டி கடுமையாக இருக்கும். யார் வெற்றி பெறுவார்கள் என்று கணிக்க முடியாது. இருபது-20 போட்டியில் விளையாடுவதற்கு திறமையான வீரர்கள் வேண்டுமென்றார். (5)





றொகான் இராஜசிங்கம் ஞாபகார்த்த ஹொக்கித் தொடரின் இறுதிப் போட்டிகள் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இவ் இறுதிப் போட்டியில் கிராஸ் கொப்பேர்ஸ் அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அணி விளையாடவுள்ளது. இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளும் யாழ்.பல்கலைக்கழக அணியை முதலாவது படத்திலும் கிராஸ் கொப்பேர்ஸ் அணியை இரண்டாவது படத்திலும் காணலாம்.

பொருளாதார நோக்கங்கள் மட்டும்தான் சமுதாயத்தில் மனிதனின் நடத்தையை நிர்ணயிக்கும் என்று கருதிவிட முடியாது.

–ப்ராய்டு

வலம்புரி

## வாகனம் ஓட்டுவோர் யாவரும் பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டும்

வாகனம் ஓட்டுவோர் வேகக் கட்டுப்பாட்டை கடைப்பிடிக்க வேண்டும் என்பது பொதுவான நியதி.

வேகக் கட்டுப்பாட்டை மீறுவோர் மீது சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க முடியும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

எனினும் அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டில் தனியார் மினிபஸ்கள், ஓட்டோக்கள், மோட்டார் சைக்கிள்கள் இதர மினிவான்கள் ஓட்டுவோரில் பெரும்பாலானவர்கள் தம்மை மறந்து வாகனங்களை செலுத்துவதைக் காண முடிகிறது.

இதற்கான ஓர் ஆதாரப்படுத்தலாக நேற்று முன்தினம் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, வின்சர் தியேட்டருக்கு அருகாமையில் சிறுவன் ஒருவன் மினி பஸ்ஸினால் மோதுண்டு அந்த இடத்திலேயே பரிதாபகரமாக பலியாகிப்போனான்.

குறித்த சம்பவத்தில் யார் மீது தவறு உள்ளதென்னும் விசாரணைக்கு அப்பால் ஒரு அப்பாவிச் சிறுவன் பலியாகிப்போனான் என்பது மிகவும் வேதனைக்குரியதும் ஈடுசெய்யமுடியாத இழப்புக்குரியதுமாகும்.

பெற்று வளர்த்த அந்தப் பெற்றோர்கள் தம் பிள்ளையை இழந்து எத்துணை துயரப்படுவார்கள் என்பதை வாகனத்தைச் செலுத்தும் ஒவ்வொருவரும் தம் சிந்தனையில் நிலை நிறுத்திக் கொள்வார்களாயின், இத்தகைய அவலச் சம்பவங்கள் ஒருபோதும் இடம்பெறமாட்டாது.

எனினும் யாழ்ப்பாணத்தில் வாகனம் ஓட்டுவோரில் பெரும்பாலானவர்கள் தம்மை கட்டுப்படுத்த முடியாதவர்களாக –பொறுப்பற்றவர்களாக –வீதியில் தாம் மட்டுமே பயணிப்பதாக நினைத்துக் கொண்டு வாகனங்களை வேகமாக செலுத்துகின்றனர்.

இன்னும் சிலர் வாகனங்களைச் செலுத்தும் விதிமுறைகளை சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்கான எழுத்துப் பரீட்சையுடன் மறந்து போய் தம்பாட்டில் வாகனத்தைச் செலுத்துகின்றனர்.

சுருங்கக் கூறின் கடவுளின் கிருபையாலேயே யாழ்ப்பாணத்தில் வாகன விபத்தால் மரணங்கள் தடுக்கப்படுகின்றதெனலாம். இந்நிலை தொடர்ந்து நீடிப்பதை எவரும் அனுமதிக்கலாகாது.

குறிப்பாக தனியார் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுவோர் ‘தொழில் போட்டி’ காரணமாக வாகனங்களை வேகமாக ஓட்டுவது, வீதி ஒழுங்குகளை உதாசீனம் செய்வது போன்ற முறையற்ற நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

இவற்றின் விளைவு மனித உயிர் இழப்பாகவே அமையும் என்பதால் வாகன சாரதிகள் பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டும்.

இதனைக் கண்காணிக்க உரிய நடவடிக்கை எடுப்பதும் கட்டாயமானதாகும்.

# சிறுவர்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது

## வோச் லிப்ட் அமைப்பு கவலை

(கொழும்பு)

இலங்கையின் கொடிய ஆயுத மோதல் காரணமாக சிறுவர்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக ஆயுத மோதல்களில் அகப்பட்டுள்ள சிறுவர்கள் தொடர்பான வோச் லிப்ட் கவலை வெளியிட்டுள்ளது.

மோதல்களுடன் தொடர்புடைய தரப்பினரால் நாளாந்தம் சிறுவர்களுக்கு எதிராக மிக மோசமான குற்றச் செயல்கள் மேற்கொள்ளப்படுவதாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசபடைகள், தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் இராணுவத் துணைப்படைகள் ஆகியவற்றினால் இத்தகைய குற்றச் செயல்கள் புரியப்படுவதாக நியூயோர்க்கை தளமாகக் கொண்டியங்கும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. யுத்தம் இடம்பெறும் பிரதேசங்களில் வாழும் ஆயிரக்கணக்கான சிறுவர்களுக்கு அவசரமாகத் தேவைப்படும் உதவிகள் மறுக்கப்படுவதுடன் அவர்களுக்கு அவசியமான மனிதாபிமானத் தேவைகளும் தடுக்கப்படுவதாக அந்த அமைப்பு கவலை வெளியிட்டுள்ளது.

மேலும் சிறுவர்கள் எதிர்கொள்ளும் மிக மோசமான நிலைமைகளும் மூடி மறைக்கப்பட்டு வருவதாக ஆயுத மோதல்களில் அகப்பட்டுள்ள சிறுவர்கள் தொடர்பாக வோச் லிப்ட் அமைப்பு புதி தாக வெளியிட்டுள்ள ‘பாதுகாப்பு மில்லை, தப்பவும் வழியில்லை இலங்கையில் உக்கிரமடையும் ஆயுத மோதல்களும், சிறார்களும்’ எனும் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கையில் யுத்தம் உக்கிர மடையலாம் என அஞ்சக்கூடிய வகையில் பாரிய படை நடவடிக்கைகள் நிகழ்ந்து கொண்டிருக்கும் பின்னணியில் இந்த அறிக்கை ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

இதே வேளை, ஆயிரக்கணக்கான சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலைமையும், மிக அடிப்படையான மருத்துவ வசதிகள் மறுக்கப்பட்ட நிலைமையும் காணப்படுவதாக அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது. மேலும் கடத்தல்கள், கண்மூடித்தனமான கைதுகள், சட்ட விரோத படுகொலைகள், தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள், கண்ணிவெடித் தாக்குதல்கள், பலாத்கார ஆட்சேர்ப்புக்கள் என்பவற்றினால் சிறுவர்களின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்படும் நிலைமை தோன்றியிருப்பதாக அந்த அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் சிறுவர்களின் பாதுகாப்புத் தொடர்பான சர்வதேச தராதரங்களைக் கடைப்பிடிக்குமாறு விடுதலைப் புலிகள், இலங்கை அரசாங்கம், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் ஆகிய வற்றுக்கு ஐக்கிய நாடுகள் சபை கடுமை யான அழுத்தம் கொடுக்க வேண்டும் என அந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ–7)

## அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் பயிற்சி நெறியைப் பின்பற்றவும்

## மானிய ஆணைக்குழு எச்சரிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழங்கள் தவிர்ந்த ஏனைய நிலையங்கள் நடாத்தும் பயிற்சி நெறிகளைப் பின்பற்றுவதில் எச்சரிக்கையாக இருந்து கொள்ள வேண்டும் என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சில நிலையங்கள் போலிச் சான்றிதழ்களை வழங்குவது குறித்து ஆணைக்குழு பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பொதுநலவாய நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்கள் தொடர்பாக லண்டனில் வெளியிடப்பட்டுள்ள கைநூலில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கைப் பல் கலைக் கழகங்களை மட்டுமே மானிய ஆணைக் குழு அங்கீகரிக்கிறது என்று ஆணைக் குழுவின் தலைவர் பேராசி ரியர் காமினி சமரநாயக்க தெரிவித்துள்ளார். இந்தக் கைநூலில் 15 இலங்கைப் பல் கலைக்கழகங்கள் மாத்திரமே உள்ளடக்கப்பட்டுள்ளன.(அ–7)

## கணவர் ஓய்வூதியம் பெறும் வகையில் தனியார் பாடசாலைச் சட்டத்தில் திருத்தம்

(கொழும்பு)

1953 ஆம் வருட தனியார் பாடசாலைகள் சட்டம் திருத்தியமைக்கப்படவுள்ளது. ஓய்வூதியம் பெற தகைமையுள்ள ஆசிரியர்களுக்கு, விதவைகள், வாழ்க்கைத் துணைகள் ஆகியோருக்கான கொடுப்பனவுகளை வழங்குவதே இந்த சட்டத் திருத்தத்திற்கான நோக்கம் என்று ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் கே.ஜே.திலகரட்ண தெரிவித்துள்ளார்.

பெண் ஊழியர்களுக்கு இந்தக் கொடுப்பனவு ஏற்கனவே வழங்கப்பட்டு வருகிறது. புதிய திருத்தத்தின் படி மனைவி மரணமான பின்னர் அவரது கணவர் மனைவியின் ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்ள முடியும். இந்தத் திட்டத்தின் பிரகாரம் தனியார் பாடசாலைகளில் கடமையாற்றும் சுமார் 10 ஆயிரம் ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் பெறும் வாய்ப்பு ஏற்படும் என்று திலகரட்ணம் மேலும் தெரிவித்துள்ளார். (அ–7)

# உணவுவகைகளின் விலை உயர்வால் நூறு மில்லியன் மக்கள் மேலும் வறுமைக்குள் தள்ளப்படுவர்

## உலக வங்கி எச்சரிக்கை

(கொழும்பு)

உணவு வகைகளின் விலைகள் கணிசமான அளவு உயர்ந்துள்ளதால் வறிய நாடுகளைச் சேர்ந்த 100 மில்லியன் மக்கள் மேலும் வறுமைக்குள் தள்ளப்படுவார் என உலக வங்கி எச்சரித்துள்ளது.

உணவு விலைகள் அதிகரித்துச் செல்வதன் காரணமாக உலகம் முழுவதிலும் உள்ள ஆயிரக்கணக்கான மக்கள் பட்டினியை எதிர்நோக்குவர் என சர்வதேச நாணய நிதியம் எச்சரித்துள்ளதைத் தொடர்ந்தே உலக வங்கியின் தலைவர் றொபேட் சோலிக்கும் இந்த எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உணவு நெருக்கடியைத் தவிர்க் கும் நோக்கில் நீண்ட காலத்திட்ட அடிப்படையிலோ விவசாய உற்பத்தித்திட்டமொன்று அவசியம் என சோலிக் யோசனை ஒன்றை முன்வைத்துள்ளார்.

கடந்த 3 வருடங்களில் உணவு வகைகளின் விலைகள் உயர்ந்து கொண்டே போவதன் காரணமாக குறைந்த வருமானம் பெறும் 100 மில்லியன் மக்கள் மேலும் வறுமைக்குள் தள்ளப்படுவார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் சர்வதேச உணவு நெருக்கடியைத் தவிர்ப்பதற்கென சோலிக்கினால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைக்கு உலக வங்கியின் மேம்பாட்டுக் குழுவினரும், அபிவிருத்தி அமைச்சர்களும் அங்கீகாரம் வழங்கியுள்ளனர்.

இதேவேளை உணவு வகைகளின் விலைகள் அதிகரித்துச் சென்றால் உலகில் உள்ள ஆயிரக் கணக்கான மக்கள் பட்டினியை எதிர்நோக்குவார் என சர்வதேசநாணயநிதியத்தின் தலைவர் டொமினிக் ஸ்ரூட் நேற்று முன்தினம் எச்சரித்திருந்தார்.

உணவு விலைகள் அதிகரித்துச் செல்வதால் அமைதியின்மை ஏற்பட்டு அது வன்முறையாக மாறும் எனவும் அவர் கூறினார்.

பிலிப்பைன்ஸ், எகிப்து உட்பட பல நாடுகளில் உணவு விலைகள் அதிகரித் துள்ளதன் காரணமாக வன்முறைகள் இடம் பெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

உணவு விலைகள் மற்றும் பண வீக்கம் தொடர்பான உடனடி தீவிர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

இலங்கையிலும் அண்மைக் காலமாக உணவு வகைகளின் விலைகள் அதிகரித்துச் செல்வதன் காரணமாக குறைந்த வருமானம் பெறும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ–7)

## ஓலைச் சுவடிகள் 14

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

### நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

**சந்தனம், கோயிலுக்கு வெளியில் சென்ற பின் அணிய வேண்டும்.**

கோயிலுக்கு செல்லும் பக்தன் பொதுவாக பூசாரியிடமிருந்து பிரசாதம் வாங்கி வரவேண்டும் என்பதுவே முறை, சந்தனம், தீர்த்தம், தீபம், தூபம், பூ என்பவை ஐந்தும் பெற்றுக்கொள்ளவேண்டும். இவை பஞ்சபூதங்களைக் குறிக்கின்றன. பூவும் துளசியும் குவளையும் சேர்ந்த தீர்த்தம், சிறிதும் தரையில் சிந்தாமல் ஒன்றோ இரண்டோ துளிகள் வாங்கி பக்தியுடன் அருந்த வேண்டும். மிஞ்சியிருந்தால் தலையில் தெளிக்கலாம். பூவை தலையில் அணியலாம். பெண்கள் கூந்தல் நுனியில் சொருகி வைக்கலாம். தூபமும் தீபமும் இருகைகளால் ஏற்றுக் கொண்டு கண்களில் ஒற்றி கீழ்நோக்கி தடவி விடவேண்டும்.

பின்னர் பிரசாதமாகக் கிடைக்கப்பெறும் சந்தனம் கோயிலுக்கு வெளியே வந்து அணிய வேண்டும். ஆனால் பெரும்பான்மையோர் கிடைத்தவுடன் அணிவது வழக்கம்.

# அரசியல் தலைவர்களின் பாதுகாப்புக்கு கூர்க்காப் படைகளை அழைக்கத் தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையின் உயர்மட்ட அரசியல் தலைவர்களுக்கு இந்தியாவின் கூர்க்கா படையினரை சேவையில் ஈடுபடுத்துவது பற்றி இலங்கை அரசாங்கம் கவனம் செலுத்தியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாரிய உயிரச்சுறுத்தல்களை எதிர்நோக்கும் அரசியல் தலைவர்களுக்கு கூர்க்கா பாதுகாப்பு வழங்குவதற்கு அரசு தீர்மானித்திருப்பதாகவும் இந்த விடயம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சால் தயாரிக்கப்பட்ட பிரேரணை அரசாங்கத்தின் கவனத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும் இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பல ஆசிய நாடுகளின் நாட்டுத் தலைவர்கள் மற்றும் விசேட பிரதிநிதிகளின் பாதுகாப்புக்கு கூர்க்கா படையினர் சிறந்தவர்கள் எனவும் உயிர்களை பாதுகாப்பதில் அவர்கள் சிறந்த பயிற்சிகளை பெற்றிருப்பதாகவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உயர்மட்ட அரசியல் தலைவர்களின் பாதுகாப்பு தொடர்பாக மேற்கொள்ளப்படும் அறிக்கைக்கு அமையவே கூர்க்கா படையினரை வரவழைப்பது தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கப்படுமெனவும் அந்த இணையத்தள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# மடுப் பகுதி மோதல்களை நிறுத்தக் கோரி

# சேகரிக்கப்பட்ட கையெழுத்துக்கள் அரசுக்கும் புலிகளுக்கும் அனுப்ப ஏற்பாடு

(மன்னார்)

மடுத் தேவாலயப்பகுதியில் இடம்பெறும் மோதல்களை நிறுத்தவேண்டுமெனக் கோரி மக்களிடமிருந்து பெறப்பட்ட கையெழுத்துக்களை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக மன்னார் குருமுதல்வர் தெரிவிக்கிறார்.

மடுப்பிரதேசத்தில் யுத்த நடவடிக்கைகளை நிறுத்தி அப்பகுதியை சமாதான வலயமாக பிரகடனப்படுத்த அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் முன்வரவேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்தி மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள அனைத்து கத்தோலிக்க தேவாலயங்களிலும் இந்த மாதம் 06 ஆம் திகதி திருப்பலி பூஜையின் பின்னர் மக்களிடம் கையெழுத்து வேட்டை நடாத்தப்பட்டது.

இவ்வாறு பெறப்பட்ட சுமார் 19 ஆயிரத்து 833 கையெழுத்துக்களும் குருக்களால் மன்னார் மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் நேற்று மாலை குருமுதல்வர் அன்ரனி விக்டர் சூசையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கையெழுத்து பிரதிகளைப் பெற்றுக் கொண்ட குரு முதல்வர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை மன்னார் ஆயரின் பணிப்புரைக்கு அமைவாக மேற்கொண்டிருப்பதாக விக்டர் சூசை தெரிவித்தார். (ச-5)

## தமிழீழ...

தற்போது தோன்றியுள்ள நெருக்கடி நிலையில் அனுசரணையாளர்களாக செயல்பட முடியாது என்று ஹன்சன் பௌவர், அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானிடம் கூறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போது மோதல்கள் இடம்பெற்று வருவதால் தம்மால் மத்தியஸ்த முயற்சியில் ஈடுபட முடியாது என்று அவர் கூறியுள்ளார். (ச-5)

## சுயநிர்ணய...

தடுப்பதற்கு எந்த நடவடிக்கையினையும் மேற்கொள்வதில்லை எனக் கூறியுள்ளார்.

பிரித்தானியாவில் ஈஸ்ட்ஹாம் பகுதியில் பிரித்தானியாவின் சோசலிச தொழிலாளர் கட்சியின் ஏற்பாட்டில்-இலங்கையில் யுத்தத்தை நிறுத்துதல்-என்ற தொனிப் பொருளில் இடம்பெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் சபையின் உறுப்பினர் ஒருவர் வெளிப்படுத்தியுள்ள அரசாங்கத்திற்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் இலங்கை அரசின் உயர் மட்டத்தில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளன. (ச-5)

## ஜனாதிபதி மகிந்தவின் அரசாங்கம்...

போதைய நிலை குறித்து கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது, 'எமது படையினர் நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர். ஆனால் அரசாங்கம் அந்த அர்ப்பணிப்பை தனது இருப்புக்காகவும் அரசியல் லாபத்துக்காகவும் பயன்படுத்துகிறது.

யுத்தமல்ல; வெறும் சத்தத்தையே அரசாங்கத் தரப்பு வெளியிடுகிறது. அரசாங்கத்தின் யுத்தத்தின் சத்தம் தொடர்பாக ஐ.தே.க.வின் நிலைப்பாடு மிக விரைவில் செயற்குழுவை கூட்டித் தீர்மானிக்கப்படும். தேசப்பற்றாளர் என்று ஜே.வி.பியினர் போர்த்தியிருந்த செம்மறி ஆட்டுத் தோல் விலகி அக்கட்சியினது தேசத் துரோகம் மக்களுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் அமைதியை ஏற்படுத்தி பொருளாதாரத்தை உயர்த்த அன்று ஐ.தே.க முன்னெடுத்த திட்டங்களை தேசத் துரோகத்தனமானதென குற்றஞ் சுமத்திய ஜே.வி.பி இன்று பிளவுபட்டுள்ளது. எனவே இன்றாவது எமது மக்கள் தேசப் பற்றாளர்கள் யார்? தேசத் துரோகிகள் யாரென்பதை புரிந்துகொள்ள வேண்டும். ஐ.தே.க இந்நாட்டின் மீது உண்மையான பற்று கொண்ட தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களையும் ஒன்றிணைக்கக் கூடிய கட்சியாகும்.

வேறெந்த அரசியல் கட்சிக்கும் இனங்களை, மதங்களை ஐக்கியமயப்படுத்தும் வல்லமை கிடையாது. யுத்தமோ உலகச் சந்தையின் விலையேற்றங்களோ நாட்டில் தினம் தினம் விலைவாசிகள் உயரக் காரணமென்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இது மக்களை ஏமாற்றும் யுக்தியாகும். கோழி முட்டை, தேங்காய் எல்லாம் உலகச் சந்தையிலிருந்தா இறக்குமதி செய்யப்படுகின்றது? இல்லை. இவையெல்லாம் உள்ளூர் உற்பத்திகள். இவற்றின் விலைகளும் அதிகரித்துள்ளன. இதற்குக் காரணம், அரசாங்கத்தின் ஊழல் மோசடிகள் நிறைந்த நிர்வாகச் சீர்கேடே ஆகும் என்றார். (ச-5)

## வீரவன்ச உடனான முரண்பாட்டிற்கு...

இயலவில்லை.

கட்சியின் முடிவை-கட்சியின் அரசியல் யாப்பை விமல் நிராகரித்தார். அவரது பேச்சுக்களிலும் ஊடக கட்டுரைகளிலும் ஊடகங்களிலும் கருத்து தெரிவிக்கையிலும் கட்சியின் நிலைப்பாட்டை அவர் மறுதலித்து வந்தார்.

விமலின் பேச்சுக்களையும் எழுத்துக்களையும் எவரேனும் படித்தால் ஜே.வி.பி இரட்டை நிலைப்பாடு மேற்கொண்டதாகவே தெரியும்.

**வீரவன்சவின் செயற்பாடு**

கொழும்பு விடுதிகளிலிருந்து பொதுமக்கள் வெளியேற்றிய சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்து ஜே.வி.பியால் விமலிடமிருந்து அறிக்கையை பெற இயலவில்லை.

ஆயுததாரிகளால் இருதின ஊடக நிறுவனம் தாக்கப்பட்டமை போன்ற சம்பவங்களைக் கண்டிக்குமாறு கேட்டுக்கொண்டார். ஜே.வி.பியைத் தாக்கி எழுதக்கூடிய ஊடகம் அது -அரசாங்கத்துக்கு எதிரான ஊடகம் அதனால் கண்டிக்க முடியாது என்று கூறிவிட்டார்.

**மத்திய குழுவுடன் முரண்பாடு**

விமல் மீது பல குற்றச்சாட்டுக்கள் உள்ளன. கட்சியின் நிலைப்பாட்டை ஏற்க மறுத்தது என்பது கட்சி உள்விவகாரம். கட்சியில் இருந்து தொண்டே ஐக்கிய தேசியக் கட்சி, அமெரிக்க ஏஜன்ட் அமைப்பான சி.ஐ.ஏ மற்றும் ஏகாதிபத்திய சக்திகளுடன் ஜே.வி.பி இணைந்து செயற்படுவதாக கூறியுள்ளார்.

இது பாரதூரமான குற்றச்சாட்டு. நாங்கள் இன்னும் அமைதியாக இருக்க முடியாது. இதுவரை நாங்கள் முடிவெடுக்கவில்லை.

விமல் இப்போதும் கட்சியின் பரப்புரை செயலாளர்தான். விமல் இப்போதும் கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவராவார். அவரிடமிருந்து நாங்கள் எதனையும் பறிக்கவில்லை. கட்சியிலிருந்து தன்னை நீக்க உள்ளதாக அவர் கூறியுள்ளார். அப்படியாக இருந்தால் அவரை தொடர்ந்தும் நாடாளுமன்ற குழுத் தலைவராக ஜே.வி.பி அனுமதிக்குமா?

அவருக்கு ஆதரவு தெரிவித்துள்ள 10 உறுப்பினர்களும் கட்சியை விட்டு வெளியேறவில்லை. சுயாதீனமாக இயங்கப் போவதாக தெரிவித்துள்ளனர். கட்சிக்குள் பிரிவுகள் உருவாவது இது முதல் முறையொன்றும் அல்ல.

ஒவ்வொரு பிரிவுமே தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. கட்சியே வென்றிருக்கிறது. விமலும் அவரது ஆதரவாளர்களும் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். ஜே.வி.பியின் அரசியல் யாப்புக்கு மேலே யாரும் இல்லை.

**அரசுடன் தொடர்பு**

இந்தப் பிரச்சினைக்குப் பின்னால் யார் உள்ளார் என்று நாங்கள் விசாரணை நடத்தி வருகிறோம். சில முதல்வர்கள்-அரசாங்க அமைச்சர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களுக்கும் இதில் தொடர்பு உள்ளது. அரசாங்கத்தின் பின்னணி உள்ளதா? என்பதையும் நாம் கண்டறிவோம்.

அரசாங்கத்தின் அமைச்சர்களுடன் விமல் தொடர்ந்து சந்தித்து பேசி வருகிறார் என்றெல்லாம் செய்திகள் வருகின்றன. நாங்கள் அனைத்தையும் நம்பவில்லை. மத்திய குழுவிற்கு விமல் நேரில் வந்து விளக்கமளிக்க வேண்டும். ஒரு இயக்கம் என்ற அடிப்படையில் எமது கட்சியின் கதவுகள் திறந்தே இருக்கின்றன. அவரால் இப்போதும் கட்சியின் மத்திய குழுவுக்கு வர முடியும். அவர் தனக்காக வாதிட முடியும்.

ஒரு நாள் நிச்சயமாக ஐக்கிய தேசியக் கட்சியின் பின்னணியில் விமல் நிற்பார். அரசாங்கத்தில் தான் ஒரு அங்கம் என்ற உண்மையை அவரால் நீண்ட காலம் மறைத்துவிட முடியாது.

உடனடியாக அவர் அரசாங்கத்தில் இணைந்து விடமாட்டார். அடுத்த பொதுத் தேர்தல் வரை கூட அவர் காத்திருக்கலாம் என்று சோமவன்ச அமரசிங்க கூறியுள்ளார். (ச-5)

## அனைத்துக் கட்சிக்...

லண்டனுக்கு விஜயம் செய்திருந்த அவர் நேற்று லண்டன் பி.பி.ஸி. தமிழோசைக்கு நேரடியாகச் சென்று வழங்கிய செவ்வி ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்தார். இந்த அனைத்துக் கட்சிக் குழுவின் நடைமுறைகளிலிருந்து விலகிச் சென்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி. ஆகியவை குறித்துக் கருத்துக் கூறிய அவர்,

ஏற்கனவே அதிகாரபூர்வமற்ற வகையில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இந்த விடயங்கள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் நடைமுறைகளில் இணைய வரும் போது ஜே.வி.பியையும் அதில் இணைந்து கொள்ள வருமாறு தான் அழைப்பு விடுக்கவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தொடரும் நிகழ்வுகளால் விடுதலைப்புலிகள் அமைதி நடைமுறைக்குள் வர முன்வராத நிலை ஏற்படுமானால் அப்போது ஒருவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த அனைத்துக் கட்சிக் குழுவில் இணைந்து செயற்படுவதற்கான அவசியம் குறித்து ஆலோசிக்கலாம் என்று தான் எதிர்பார்ப்பதாக திஸ்ஸ விதாரண கூறினார்.

அனைத்துக் கட்சிகளுடனும் இது தொடர்பாகப் பேச்சுவார்த்தைகளையும் கலந்துரையாடல்களையும் நடத்தி ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அவை தொடர்பாக இணக்கப்பாட்டை எட்டுவது கடினமானது.

எனினும் 90 சதவீதமான விடயங்கள் ஏற்கனவே முடிந்துள்ளதுடன் அவை தொடர்பான ஆவணங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 10 சதவீதத்தை சுமுகமான நிலைமைகள் தொடர்ந்து காணப்படின் சில மாத காலத்திற்குள் அனைத்துக் கட்சி குழுவின் இறுதி அறிக்கை முற்றாகப் பூரணப்படுத்தப்பட்டுச் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

அனைத்துக் கட்சிக் குழுவில் இடம்பெற்றுள்ள கட்சிகளுக்கிடையில் ஒரு இணக்கப்பாடு காணப்படும். இந்தக் குழுவிலுள்ள 14 கட்சிகளில் ஜே.வி.பியும் ஐக்கிய தேசியக் கட்சியும் முதலில் கலந்து கொண்ட போதிலும் பின்னர் விலகிச் சென்றுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் அதிகாரபூர்வமற்ற வகையில் வந்துள்ளது. இதுவரை இணக்கம் காணப்பட்ட 90 சதவீதமான ஆவணங்கள் கே.எம்.சொக்ஸியிடம் வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட ஆவணங்கள் தொடர்பாக அவருடைய கருத்தையும் அவரது கட்சியினது கருத்தையும் பெற்று வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைமைகள் தெரியாது. ஐக்கிய தேசியக் கட்சி வருமெனில் புதிய அரசியல் அமைப்பைக் கொண்டு வருவதற்கான 3 இல் 2 பங்கு போதுமானது என திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார். (ச-2, 5)

# மரண அறிவித்தல்

## திருமதி தில்லையம்பலம் கமலாம்பாள்

(மலயன் பென்சனர்)



யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், மூளாய் வீதி வட்டுக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் கமலாம்பாள் 14.04.2008 திங்கட்கிழமை சிவபதமடைந்தார். அன்னார் அமரர் கணபதிப்பிள்ளை தையல்முத்து தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், வீரசேகர மாப்பாண முதலியார் பரம்பரையை சேர்ந்த அமரர் சிவ குருநாதர் தில்லையம்பலம் (ஓய்வு பெற்ற தபால் அதிபர், மலேசியா) அவர்களின் அன்பு மனைவியும், ஜெயம், திரவியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரர் பொ.பரநிருபசிங்கம் (ஊழியர், மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை) அவர்களின் அன்பு மைத்துனியும்,

அருள்ராசன் (துபாலகம், வட்டுக்கோட்டை), சிறிதரன், தேவகுமார் (தேவா, சக்தி T.V., சக்தி F.M.) ஆகியோரின் பாசமிகு பெரிய தாயாரும் ஆவார். அன்னாரின் ஈமக் கிரிகைகள் 15/04/2008 (இன்று) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் இடம் பெற்று தகனக் கிரிகைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'தில்லையம்பதி',
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

(c-1031)

தகவல்;
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை வலம்புரி அச்.கோ. ஸ்.நாபவத்தாரால் இல.1, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.04.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.